REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாத இதழ்

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 18 ஒக்ரோபர் 2011 பக்கம் 16 விலை 20/= சுழற்சி 138

# மகிந்த சிந்தனையால் மறுக்கப்படும் அரசியல் தீர்வு



தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தை வழிநடத்துவது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையிலான "மஹிந்த சிந்தனை" வேலைத் திட்டமாகும். அதன் கீழேயே பொருளாதார, அரசியல், சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் எனப்படுபவை முன்னெடுக்கப்படுகின்றன. அந்த மகிந்த சிந்தனையின் கீழேயே கொடிய யுத்தம் முன்னெடுக்கப்பட்டு வெற்றி கொள்ளப்பட்டது. ஜனாதிபதியின் வழிகாட்டலில் முன்னெடுக்கப்படும் ஒவ்வொன்றிலும் மஹிந்த சிந்தனை இருப்பதாகவே பிரச்சாரங்களும் பரப்புரைகளும் செய்யப்படுகின்றன. அதேவேளை நாட்டின் பிரதான பிரச்சினையாக இருக்கின்ற தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவது என்பது இழுத்தடிக்கப்படுகிறது அல்லது மறுக்கப்பட்டு வருகின்றது. அதற்கு அடிப்படைக் காரணமாக இருந்து வருவது மஹிந்த சிந்தனையேயாகும். அச் சிந்தனைக்குள் பேரினவாத கருத்தியலும் அதன் வழியிலான சிந்தனை நடைமுறைகளும் நிறைந்திருக்கின்றன என்பது அப்பட்டமான உண்மையாகும்.

யுத்தம் முடிவுற்று இரண்டரை வருடங்கள் கழிந்து விட்டன. ஆனால் இது வரை அக்கொடிய யுத்தத் திற்கு வழிவகுத்த தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவில்லை. அதற்குரிய எந்தவொரு நேர்மையான முயற்சியும் மேற்கொள்ளப்பட வில்லை. அதற்கு பதிலாக வெறும் இழுத்தடிப்பும் ஏமாற்றுத்தனமான செயற்பாடுகளுமே முன்னெடுக்கப்படுகின்றன. அவை எதுவும் தமிழ் மக்களுக்கு ஏமாற்றம் தருவதாகே உள்ளது. இதனால் அரசினதும் ஜனாதிபதியினதும் உள்ளார்ந்த பேரினவாத நிலைப்பாட்டைப் புரிந்துக் கொள்ளக் கூடியதாகவும் உள்ளது.

தொடர்ச்சி 3ம் பக்கம்




நியூயோக்கில வோல் ஸ்ரீட் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பல்லாயிரக்கனக்கான அமெரிக்க மக்கள் தொடர்ந்து வீதிப் போராட்டம் நடாத்தி வருகின்றனர்.

## அமெரிக்காவின் அழைப்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும்.

ஐக்கிய அமெரிக்காவின் ஆளும் அரசாங்கத் தலைமையகமான வெள்ளை மாளிகையில் இருந்து தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு அங்கு வருமாறு அழைப்புக் கிடைத்திருக்கின்றது. இம் மாதம் 25ம் திகதி இரா.சம்பந்தன் தலைமையில் நால்வர் கொண்ட குழு அங்கு செல்லவிருக்கின்றது. இது நல்ல தருணமெனக் கூட்டமைப்பு வட்டாரங்கள் குதூகலிக்கன்றன. யுத்த வெற்றிக்கும் புலிகளின் தோல்விக்கும் பின்பான இரண்டரை வருட காலத்தில் வடக்கு கிழக்கின் தமிழர் சமூக அரசியல் பரப்பில் வாக்குகள் பெறும் அரசியலைத் தவிர வேறு எதையும் கூட்டமைப்பால் செய்ய இயலவில்லை அதேவேளை அரசாங்கத்துடன் பதினொரு தடவைகள்

தொடர்ச்சி 2ம் பக்கம்

## காணிப் பதிவும், எல்லைகள் மாற்றமும் திட்டமிட்ட பேரினவாத செயற்பாடு.

வடக்குக் கிழக்கில் உள்ள காணிகள், அவற்றின் உரிமையாளர்கள் பற்றிய விபரங்களைத் திரட்டும் ஒரு திடீர் பதிவுமுறையை அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ளது. அதற்கான அமைச்சு மட்ட உயர் அதிகாரிகள் களத்தில் இறங்கி மாவட்டச் செயலகங்களூடாக படிவங்களை விநியோகித்து வருகின்றனர். கிராம சேவையாளர்களுக்கு வழிகாட்டும் உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை வடக்கில் அரசாங்கம் மற்றொரு செயற்பாட்டிலும் தீவிரமாக இறங்கியுள்ளது. அதாவது வட மாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தின் சில கிராம சேவையாளர் பிரிவுகள் அடங்கிய கிராமங்களே சிங்கள எல்லைக் கிராமங்களுடன் இணைத்து வெலிஓயா பிரதேச செயலர் பிரிவொன்றை ஏற்படுத்துவதாகும். இது ஏற்கனவே திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தினால் உருவாக்கப்பட்ட வெலிஓயாவையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் கொண்ட புதிய பிரிவாக்கப்படும். அது வெலிஓயா பிரதேசச் செயலர் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவாகச் செயற்படும். அதற்கான எல்லைகள் புதிதாக நிர்ணயிக்கப்படவுள்ளன. ஏற்கனவே திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தால் உருவாக்கப்பட்ட பதவியா முன்பே அனுராதபுரத்துடன் இணைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

வடக்குக் கிழக்கின் காணிகள் பதியப்படுவதில் அரசாங்கத்திற்கு பலநிலை உள்நோக்கங்கள் உண்டு. அதில் ஒன்று புலம்பெயர்ந்து சென்றவர்களின் காணிகளைப் பற்றிய விபரங்களை உத்தியோக பூர்வமாகத்

தொடர்ச்சி 2ம் பக்கம்





## மலையக டெவன் தோட்ட மக்கள் மீண்டும் மண்ணை மீட்கப் போராட்டம்

1977 மே மாதம் 07 ஆம் திகதி டெவன் தோட்டத்தின் 7000 ஏக்கர் காணியைப் பெரும் பான்மையின மக்களுக்குப் பிரித்து கொடுப்பதற்கு அன்றைய அரசாங்கம் செய்த சதி திட்டத்திற்கு எதிராக தோட்டத் தொழிலாளர்கள் வெகுண்டு எழுந்த போது துப்பாக்கி சூட்டிற்கு இலக்காகி தன்னுயிர் நீத்த தியாகி சிவனு லெச்சுமணன் மீட்டு கொடுத்த தமது மண் மீண்டும் கபடமாக பணக்காரர்களுக்கு விற்பனை செய்யப்படுவதற்கு எதிராக டெவன் தோட்ட தொழிலாளர்கள் கடந்த நான்கு நாட்களாக வீதியில் அமர்ந்து பணிப்பகிஸ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மஸ்கெலியா பிலான்டேசன் நிறுவனத்திற்கு சொந்தமான டெவன் தோட்டத்தின் அழகிய டெவன் நீர் வீழ்ச்சிக்கு பக்கத்தில் அமைந்துள்ள டெவன் தோட்டத்திற்கு சொந்தமான காணியே சில பணக்காரர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு வினவிய போது இது தொடர்பாக நாங்கள் ஏதும் அறியோம் என கூறுகின்றனர்

தோட்டமுகாமையாளர் அமன்பொலவிடம் வினவிய போது தான் இது தொடர்பாக கம்பனிக்கு அறிவித்திருப்பதாகவும் அவர்கள் இந்த காணி விற்பனை தொடர்பாக மேலதிக விசாரணை செய்வதாகவும் கூறினார் மக்களின் போராட்டம் தொடர்பக தான் கருத்து கூற இயலாது என்றும் தனியாருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ள மேற்படி காணி தோட்ட நீர்வாகத்திற்கு சொந்தமானது எனவும் தெரிவித்தார்.

போராட்டத்திற்கு தலைமை தாங்கும் தொழிலாளர்களில் ஒருவரான சிவகுமார் கருத்து தெரிவிக்கையில், காடுகளை களனியாக்கி எமது மூதாதையர் பணத்தினை அள்ளித்தரும் பசுஞ்

### சிவனு லட்சுமணனின் தியாகம் வீண்போகக்கூடாது

சோலையாய் மாற்றினார்கள். ஆனால் காணிகளை சுவீகரித்துள்ளவர்களில் ஒருவன் 22 ஏக்கர் காணி தனக்கு சொந்தம் என்றும் மற்றும் ஒருவன் 50 ஏக்கர் காணி தனக்கு சொந்தம் என்றும் கூறுகின்றனர். உழைப்பாளர்கள் நாங்கள் 8 அடி லயத்தில் சிறை வாழ்க்கை வாழ்கிறோம் எங்களுக்கும் காணி வேண்டும் எங்களுக்கும் காணிகளை பிரித்து தாருங்கள் என்று கூறினார்.தோட்டத்தின் மாதர் சங்க தலைவி நிர்மலாவிடம் வினவிய போது சிவனு லெச்சுமணன் மீட்டுத் தந்த இரத்தம் தோய்ந்த இந்த மண்ணை மீண்டும் சூறையாட விட முடியாது எங்களுக்கு நடப்பதற்குக் கூட பாதை இல்லாமல் போகக் கூடிய நிலை உருவாகியிருப்பதாகவும் உல்லாச விடுதிகள் கட்டப்பட்டு வருவதனால் தங்களின் பிள்ளைகளின் எதிர்காலம் அச்சத்திற்கிடமாகி இருப்பதாகவும் கூறினார்.

காணியில் உல்லாச விடுதி ஒன்றை கட்டிக் கொண்டிருக்கும் பெயர் சொல்ல விரும்பாத பிரதேச தனவந்தர் ஒருவர் கூறும் போது தான் சட்ட ரீதியாகவே இந்தக் காணியைப் பெற்றக் கொண்டதாகவும் நீதி மன்றத்தில் தான் தீர்த்துக் கொள்வதாககவும் கூறினார்.

உல்லாசப் பிரயாணிகளின் கண்கவர் பிரதேசமான இந்த இடத்தில் அழகான நீர் விழ்ச்சியும் பசுமையான இயற்கையும் ஊசியிலைக் காடுகளும் நாசம் செய்யப் பட்டு உல்லாச விடுதிகளை அமைத்து வரும் இந்த பணக்காரர்களுக்குபின்னால் பல அரசியல் சக்திகள் செயல்படுவதாக கூறப்படுகின்றது .

சிவனு லெச்சுமணன் பெற்றுக் கொடுத்த இடத்தை மக்களு

தொடர்ச்சி 2ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூர் மக்களின் பாரம்பரிய நிலங்கள் இலங்கை - இந்திய கூட்டுச் சதியால் பறிப்பு.

திருகோணமலை மாவட்டத்தில் கடலோரம் அமைந்த வளங்கள் நிறைந்த பிரதேசமே சம்பூராகும். தமிழ் மக்களின் பாரம்பரிய இப்பிரதேசத்தில் இந்திய முதலீட்டில் அனல்மின் உற்பத்தி நிலையம் அமைக்க இலங்கை இந்திய அரசுகள் இணங்கிக்கொண்டன. அம்மூச் துறைமுகத்துப் பாதகமாக அமைவதுடன் இவ்வனல்மின் உற்பத்தி நிலையத்தை அமைக்க ஐநூறு ஏக்கர்கள் ஒதுக்கப்பட்டது. ஆனால் அதற்கு அப்பாலும் அரசாங்கம் தற்போது மொத்தம் எட்டாயிரம் ஏக்கர்களைத் தன் வசப்படுத்தியுள்ளது. யுத்தம் முடிந்த பின்பும் சம்பூர் மக்கள் தமது பாரம்பரிய சொந்த வாழ்விடங்களுக்கு திரும்பிச்செல்ல அனுமதிக்கப்படவில்லை. அப்பிரதேசம் உயர் பாதுகாப்புப் பிரதேசம் ஆக்கப்பட்டு வெறும் அந்த காலடி எடுத்து வைக்கவிடாது தடுக்கப்பட்டுள்ளனர்.

இந்திய அனல்மின் உற்பத்தி நிலையத்திற்கு உரிய ஐநூறு ஏக்கர்களுக்கு அப்பால் எண்ணாயிரம் ஏக்கர்களை அரசாங்கம் வைப்பதற்கு உள்நோக்கம்தான் என்ன? விரட்டப்பட்டு அகதி முகாம்களில் வாழ்ந்துவரும் சம்பூர் மக்களுக்கு வேறொரு வரண்ட பிரதேசங்களில் குடியேற்றி இருபது பேர்ச் நிலம் வழங்க அரசாங்கம் முடிவு செய்தது. 1400 குடும்பங்களைச் சேர்ந்த தமிழ் மக்கள் இதனை ஏற்க மறுத்து வருகிறார்கள். அவர்கள் தமது சொந்த வாழ்விடங்களுக்குச் சென்று விவசாயம் மற்றும் மீன்பிடி தொழில்களில் ஈடுபடவே விரும்புகிறார்கள்.

ஆனால் பேரினவாத குடியேற்றங்களை உள்நோக்கத் திட்டங்களை மகிந்த சிந்தனை அரசாங்கம் கொண்டிருப்பதன் காரணமாகவே சம்பூரின் தமிழ் மக்கள் தடுக்கப்படுகின்றனர். இதுபற்றி தமிழ் தலைமைகள் தமது எஜமானர்களான இந்திய உயர் அதிகாரிகளுக்கு முறையிட்டுக் களைத்து விட்டனர். யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்வு என்பதில் அரசாங்கம் திட்டமிட்ட வகையிலேயே செயலாற்றி வருகிறது. தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களை அபகரிப்பது, இனச்செறிவினை சிதைப்பது திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை ஏற்படுத்துவது போன்ற காரியங்களையே மகிந்த அரசாங்கம் நிறைவேற்றி வருகின்றது. "ஒரே தேசம் ஒரே மக்கள்" என்பதன் உள்நோக்கமே இவைதான். இதன் பிரதான பகுதியே சம்பூரின் நில அபகரிப்பில் நிறைவேற்றப்படுகிறது. எனவே சம்பூரில் இருந்து விரட்டப்பட்டு முகாம்களில் துயர்வாழ்வு அனுபவித்துவரும் தமிழ் மக்கள் தமது சொந்த நிலங்களுக்கும் வாழ்விடங்களுக்கும் செல்ல அனுமதிக்கப்படவேண்டும் என்னும் மக்கள் கோரிக்கையுடன் புதிய பூமி இணைந்து நிற்கின்றது. இவ்விடயத்தில் இலங்கை இந்தியக் கூட்டுச்சதியை முறியடிக்க நீதி, நியாயம் வேண்டி நிற்கும் அனைத்து மக்களும் ஆதரவு வழங்க வேண்டும்.

# தினக்குரல் ஊடகவியலாளர்கள் வீதிக்கு விரட்டப்பட்டு மீண்டும் சேர்க்கப்பட்டனர்.

கொழும்பிலிருந்து வெளிவரும் தினக்குரல் நாழிதழின் ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த 22 ஊடகவியலாளர்கள் ஒரே நாளில் வீதிக்கு விரட்டப்பட்ட சம்பவம் கடந்த மாத நடுப்பகுதியில் நடந்தேறியது. முதலாளிகளது புதிய நிர்வாகம் மேற்படி 22 ஊடகவியலாளர்களைப் பதவி விலகிப் புதிய நியமனங்களை ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்தியது. பழைய நியமனத்தைத் தொடர்வதால் தமக்கு ஏற்படும் நட்டத்தை உள்நோக்கமாகக் கொண்டே தினக்குரலின் புதிய நிர்வாகமான முதலாளிகள் ஊடகவியலாளர்களை பதவி விலகிப் புதிய நியமனத்துக்கு வருமாறு வற்புறுத்தினர். இதனை அவ் ஊடகவியலாளர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்ததனாலேயே அவர்களை வீதிக்கு விரட்டினர். கடந்த பதினைந்து ஆண்டுகளாக தினக்குரல் நாழிதழை வளர்த்தெடுக்க இவ் ஊடகவியலாளர்கள் இரவு பகலாகத் தமது உழைப்பை வழங்கிவந்தனர்கள். குறைந்த சம்பளம், ஏனைய தொழில் உரிமை மறுப்புகள் மத்தியில் மட்டுமன்றி பல அச்சுறுத்தல்களின் மத்தியிலும் பணிபுரிந்து வந்தவர்கள். அத்தகையவர்களுக்குத்தான் மேற்படி நிலைமை ஏற்பட்டது.

இவ்வாறு 22 ஊடகவியலாளர்கள் வெளியே அனுப்பப்பட்டு நிர்க்கதியாக நின்றபோது அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி பற்றித் தட்டிக் கேட்கத் தமிழ்த் தேசியம் பேசுவோரோ அல்லது அதன் பெயரில் இன, மத, மொழி மேன்மை பேசி நிற்கும் கனவான்களோ எவரும் முன்வரவில்லை. அவ்வாறு நிலை தமிழின் பெயரால், இந்து மதத்தின் பெயரால், சட்டத்தின் பெயரால், உயர் பதவிகளால் எல்லாம் தமிழ் சமூகத்துக்கு கொம்பு பிடித்து முன்வரிசை வகிப்பவர்கள் இத்தமிழ் முதலாளிய நிறுவனத்திடம், வீதிக்கு விரட்டப்பட்ட 22 ஊடகவியலாளர்களுக்காக நீதி வேண்டி வாதாட முன்வரவில்லை. ஏன்? என்று விசாரித்தால்தான் உண்மை வெளிச்சத்துக்கு வரும். வர்க்கம் இல்லை, சுரண்டல் இல்லை, சாதி இல்லை, ஒடுக்குதல் இல்லை, நம்மிடையே இருப்பது ஒன்றே ஒன்றுதான். அதுவே புனிதமான தமிழ்த் தேசியம் என இடையறாது ஓதி வருபவர்கள் இவ் ஊடகவியலாளர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி பற்றி வாய்களைத் திறக்கவே இல்லை. ஏன் அவ்வாறு நடந்துகொண்டார்கள், அங்கேதான் தமிழ்த்தேசியத்தின் மறைவிலான வர்க்கசுரண்டல் இருக்கின்றது. பதினைந்து ஆண்டுகளாகத் தினக்குரலில் இரவுபகல் உழைத்து அதன் முதலாளிகளுக்கு லாபம் சேர்த்துக் கொடுத்த ஊடகவியலாளர்கள் 22 பேரில் ஒருவர்தானும் சிங்களவர் இல்லை. அப்படியானால், இன மொழி மானமும் மேன்மையும் எங்கே போனது? உழைப்பவர்கள் உண்மை பின்னணியைக் கண்டுகொள்வார்கள்.

அவ் 22 ஊடகவியலாளர்கள் வீதிக்கு விரட்டப்பட்டு மூன்று வாரங்களாகியும் ஒரு நல்லெண்ணம் கொண்டவர்களைத் தவிர, சமூகப் பெரும் புள்ளிகள் எனப்பட்ட எந்தக் கனவானும் அவர்களைத் திரும்பிப் பார்க்கவில்லை. தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அப்பக்கமே தலை நீட்டவில்லை. தொழில் அமைச்சரும் தலையிட்டும் புதிய நிர்வாக முதலாளிகள் செவி சாய்க்கவில்லை. இவ் ஊடகவியலாளர்களுக்காக ஊடக அமைப்புக்களும் பெயரில் இறங்கவில்லை. எதுவும் செய்ய இயலாத சூழலில், புதிய நிர்வாக முதலாளிகள் வற்புறுத்தியபடி, பழைய பதவிகளில் இருந்து விலகி, புதிய நியமனங்களை ஏற்று மீண்டும் தினக்குரலில் வேலைசெய்ய ஊடகவியலாளர்கள் சேர்ந்துள்ளனர். எங்கும் வியாபித்து நிற்பது போன்று தமிழர்கள் மத்தியிலும் சுரண்டும் முதலாளிகளும் சுரண்டப்படும் தொழிலாளிகளும் இருக்கின்றனர். அதற்கான ஒரு அண்மைய உதாரணம்தான் தினக்குரலில் நடந்ததாகும்.

1ம் பக்கத் தொடர்ச்சி

**மகிந்த சிந்தனையால்**

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் சர்வதேச அரங்கில் மகிந்த சிந்தனை அரசாங்கத்திற்கு கடுமையான கரும் புள்ளிகளை ஏற்படுத்திக் கொண்டன. அதனைத் துடைத்தெறிவதற்கு ஜனாதிபதி முதல் அமைச்சர்கள் வரை கடும் முயற்சி எடுக்கவேண்டி ஏற்பட்டது. இன்றும் அவை தொடர்கின்றன. அதேவேளை தனது போர்க்கால கூட்டாளியான இந்தியாவின் சில முனை அழுத்தம் காரணமாக ஒருசில கண்துடைப்பு நடவடிக்கைகளை மஹிந்த சிந்தனை அரசாங்கம் எடுக்கவேண்டி ஏற்பட்டது. அதன் வழியிலேயே தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் சந்திப்புகள் பேச்சுவார்த்தைகள் என்ற காட்சிகள் காட்டப்பட்டும் வந்துள்ளன. இவ்வருடத்தின் ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தை என்ற படலம் இது வரை பதினொரு தடவைகளின் இடம்பெற்ற போதும் ஒரு சிறு புள்ளி நகர்வு கூட ஏற்படவில்லை. இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் அரசியல் தீர்வு காணும்படியும் அதற்காக தமிழ்த் தலைமைகளுடன் பேசும்படியும் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் கூறியே வருகிறார்கள். ஆனால் இந்தியா தனது அதிகாரத்தின் கடும் அழுத்தத்தை இலங்கை மீது கொடுப்பதாக இல்லை. அதற்கு காரணம் இந்தியாவின் பொருளாதார, அரசியல், இராணுவ நலன்கள் பிராந்திய ரீதியில் இலங்கை மீது படிந்திருக்க வேண்டும் என்பதற்காகவேயாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்று முற்றுமுழுதாக இந்தியாவையே நம்பியுள்ளனர். அதேவேளை புலம்பெயர் தமிழ் மேட்டுக்குடியினர் ஏனையவை அமெரிக்க மேற்குலக அழுத்தங்களையும் ஊன்றி ஊக்கப்படுத்தியும் வருகின்றனர். அதன் காரணமாகவே அமெரிக்கா தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு அழைப்பு விடுத்துள்ளது. இவற்றுக்கு அப்பால் வேறு எதையும் செய்ய முடியாத கையறு நிலையிலேயே தமிழ்த் தலைமைகள் எனப்படுபவைகள் இருந்து வருகின்றன.

மஹிந்த சிந்தனையானது இந்திய அமெரிக்க மேற்குலக அழுத்தங்களைப் புறந்தள்ளி அரசியல் தீர்வு என்பதை மறுத்து நிற்பதற்கு சீனா, ரஷ்சியா, ஈரான் மற்றும் சில நாடுகளைத் தனது காப்புக்கவசங்களுக்கு கையில் எடுத்து நிற்கின்றது. அந்த நாடுகள் போர்க் குற்றச்சாட்டுகளையும் மனித உரிமை மீறல்களையும் தமது கவனத்திற்கு எடுக்கவில்லை. ஏனெனில் அந்நாடுகளுக்கு குறிப்பாக சீனாவின் வர்த்தக நலன்களுக்கும் கம்பனிகள் மூலமான முதலீடுகளுக்கும் இலங்கையில் மஹிந்த சிந்தனையும் அதன் தலைமையிலான அரசாங்கமும் நம்பத்தகுந்த நண்பர்களாக விளங்குகின்றனர். அதனாலேயே ஜனாதிபதியும் அரசாங்கமும் அரசியல் தீர்வை மறுத்து நிற்பதற்கான வலுவுள்ள தளமாகவும் மேற்படி நாடுகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

அதேவேளை யுத்த வெற்றியை மஹிந்த சிந்தனையானது சிங்கள மக்கள் மத்தியில் தொடர் பரப்புரைகளுக்கும் வெற்றிப் பெருமிதங்களுக்கும் உள்ளாக்கி பேரினவாதத்தை கெட்டிப்படுத்தியும் வருகிறது. ஏற்கனவே நீறுபூத்த மயப்படுத்தப்பட்டு வந்த பௌத்த சிங்கள பேரினவாதத்தை சிங்கள மக்களிடையே மேலும் அரசியல் தளத்திற்கு எடுத்துச் சென்றதில் மஹிந்த சிந்தனை தற்காலிகமாக வெற்றி பெற்றிருக்கின்றது என்பதில் ஐயமில்லை. அதனாலேயே ஜனாதிபதியானவர் தன்னை துட்டகைமுனு என நிலை நாட்டிக் காண்பிக்கவும் துட்டகைமுனுவின் அஸ்தி என்பதனை அருங்காட்சியகத்தில் வைத்து வணங்கிப் பிரசாரப்படுத்தவும் முடிந்தது.

இத்தகைய அடிப்படையிலான மகிந்த சிந்தனையானது நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் என நம்புவது முட்டாள்தனமானதாகும். இத்தகைய அரசியல் தீர்வின் மறுப்பை அரசாங்கத்தில் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்று நிற்கும் தமிழ், முஸ்லீம், மலையகத் தலைமைகளின் ஆதரவோடும் தான் மகிந்த சிந்தனையானது முன்னெடுக்கப்பட்டு வருகின்றதென்பது முரண்நகைப்பிற்குரியதாகும். இவற்றின் உண்மையாதெனில் இன உணர்வு இன உரிமை என்பவற்றுக்கு அப்பால் வர்க்க நலன்களும் அவற்றின் இருப்பும் தொடர்ச்சியுமே முதன்மையானது என்பதை எடுத்துக்காட்டும் விதமாகவே உள்ளது.

எனவே அரசியல் தீர்வைப் பேரினவாத நிலைப்பாட்டில் இருந்து மறுத்து வரும் மஹிந்த சிந்தனையை உடைப்பதற்குரிய ஒரே வழி உழைக்கும் சிங்கள வெகுஜனங்களிடையே அரசியல் தீர்வின் நியாயங்களை எடுத்துச் செல்வதேயாகும். இந்தியாவிடமோ, அமெரிக்காவிடமோ, மேற்குலகிடமோ எடுத்துச் செல்வதில் பயன் ஏதும் இடம்பெறமாட்டாது. இதுவரை கிடைத்தபட்டறிவு போதுமானதாகும். எனவே ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் நியாயபூர்வமான உரிமைகள் பற்றிய விடயங்களை உழைக்கும் சிங்கள மக்கள் மத்திக்கு எடுத்துச் செல்வது சரியான வழிமுறை மட்டுமன்றி இதுவரை முன்னெடுக்கப்படாத ஒன்றுமாகும். தூரநோக்கற்ற தமிழ் தலைமைகளின் குறுகிய தேசியவாத அரசியலாலும் அதன் விளைவான தோல்விகள் அழிவுகளின் விரக்தியாலும் மௌனமாகி ஒதுங்கியிருந்து வரும் தமிழ் மக்கள் [illegible] போராட்ட அரசியலைத் தமது தெரிவாகக் கொள்ள வேண்டும். அத்தகைய தெரிவானது சிங்கள உழைக்கும் வெகுஜனங்களுடனான அரசியல் உறவாக வளர்க்கப்பட்டு முன்னெடுக்கப்பட வேண்டும். இப்பரந்த வெகுசன அரசியல் மார்க்கத்தில் முஸ்லீம் மக்களும் மலையகத் தமிழ் மக்களும் இணைக்கப்படல் வேண்டும். இது இலகுவில் உள்வாங்கிக் கொள்ள இயலாத ஒன்றாக ஆரம்பத்தில் காணப்படினும் பேரினவாத ஒடுக்குமுறையை எதிர்த்து நியாயமான அரசியல் தீர்வைப் பெற்றெடுப்பதற்கு வேறு மார்க்கம் இருக்க முடியாது என்பது எமது உறுதியான நிலைப்பாடாகும்.

## கயிறுகள் அறுக்கப்படும்

-காளக்கையூர் மகேந்திரன்-

அம்மா!
நீள் மலை எங்கிலும்
நீ நிரப்பிய குருதியும்
இறைத்த வியர்வையும்
நானாக...

உனது பாத வெடிப்புகளும்
கறுப்பேறிக் களைத்த தேகமும்
அழகிழந்த உன் பாச முகமும்
சொட்டுச் சொட்டாய் உறிஞ்சப்பட்ட
உழைப்பின் வடுக்கள்

வெய்யில் நெருப்பில் புகுந்து
சீறியடிக்கும் மழையிடை மலை கடந்தாய்
வாட்டும் நோயிலும் உழைப்பையே மருந்தாக்கி
வசந்தம் விதைக்கத் துடித்தாயே

உன் புதைந்துயர் கதையை
எனைச் செதுக்கினாயே
ஞாபகம் இருக்கிறதம்மா
இப்போது வளர்ந்து விட்டேன்
இனி...

வதைபடும் உழைப்பாளர்கட்காய்
என் பாதங்கள் இயக்கமுறும்
அடுத்த தலைமுறைத் தாய்மையின்
அடிமைக் கயிறுகள் அறுக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தின் சமூக கட்டமைப்பும் ஏற்பட வேண்டிய மாற்றங்களும்

தேசிய அரசியலில் நீரோட்ட மலையக மக்கள் பிரிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர்கள் தேசிய அரசியலில் நீரோட்ட சேர்க்கப்பட வேண்டும் என்றுமான கோரிக்கை மலையகத்தில் பலராலும் பல காலம் முன் ஒலிக்கப்பட்ட ஒன்றாகும். எனினும் அது 2003 ஆண்டில் சட்டரீதியாக மலையக மக்களின் பிரஜா உரிமை விவகாரம் தீர்க்கப்பட்ட பின்னர் ஓய்ந்திருப்பதனைக் காணலாம். அந்த கோரிக்கைகளின் ஓய்வு மலையக மக்கள் பிரஜா உரிமை பிரச்சினைக்கான தீர்வுடன் அவர்களின் தேசிய அரசியலுக்கு நீரோட்ட இருந்த தடைகள் எல்லாம் களைந்துவிட்டது என்ற அடிப்படையிலானதாக அமைந்திருக்குமாயின், அது அனைத்து மலையக மக்களினதும் பிரஜா உரிமை சமன் தேசிய அரசியல் நீரோட்ட என்றாகிவிடும். தேசிய அரசியலில் நீரோட்ட மலையக மக்கள் இணைவதில் அனைத்து மலையக மக்களுக்குமான பிரஜாவுரிமை மறுப்பு முக்கிய தடையாக இருந்தமை உண்மையே. ஆனாலும் மலையக மக்கள் தேசிய அரசியலுக்கு நீரோட்ட தடையாக அதனை விட வேறு வலுவான காரணிகள் இருக்கின்றமை அவதானிக்கத்தக்கது.

மலையக மக்கள் இன்றும் நாட்டின் பொதுச் சட்டங்கள், அரசாங்க பொது நடைமுறைகளுக்கு அமைவாக நடாத்தப்படுவதில்லை. பெருந்தோட்டங்கள் ஒரு தனி இராச்சியமாக பிரித்தானியர் ஆட்சிகாலத்தில் இருந்தது நாம் அறிந்ததே. இன்றும் பெருந்தோட்டங்கள் அதே பழைய கட்டமைப்புகளின் தொடர்ச்சியையும், பழைய கட்டமைப்பை நீடிப்பதற்கு ஏற்ற சில புதிய கட்டமைப்புகளையும் கொண்டு அமைந்துள்ளன. இன்று சிற்சில மாற்றங்களுக்கு உட்பட்டிருந்தாலும் பெருந்தோட்டங்கள் ஒரு தனி ராச்சியமாகவே இருந்துவருகிறது. அதாவது தோட்ட நிர்வாகங்கள் மலையக மக்களின் அன்றாட வாழ்க்கை செயற்பாடுகளில் அவசியமற்ற தலையீடுகளை செலுத்தி வருகின்றன. அதாவது தோட்ட முகாமைகள் ஒரு தொழில் வழங்குனர் என்றவகையில் தொழிலாளருடன் கொண்டிருக்க வேண்டிய உறவைக் கடந்து அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு விடயங்களில் தலையீடும் தலைமைய அமைப்பாக இன்றும் காணப்படுகிறது. வேறு வகையில் சொல்வதானால் மலையக மக்கள் அரசாங்க நிர்வாகத்துடன் நேரடியாக தொடர்புபடுவதைத் தடுக்கும் செயற்பாட்டை தோட்ட நிர்வாக கட்டமைப்பு கொண்டுள்ளது. இது ஒரு தேசிய இனம் என்ற வகையில் மலையக மக்கள் எதிர்கொள்ளும் பிரத்தியேகமான பிரச்சினையாகும். சுதந்திரத்திற்கு பின்வந்த எல்லா அரசாங்கங்களினதும் இனவாத நோக்கும், வர்க்க நிலைப்பாடும் இன்று வரை மலையக மக்கள் அரசாங்க நிர்வாகத்துடன் இணைவதைத் தடுத்து மலையக மக்களின் உழைப்பை மிகக் கூடுதலாக சுரண்டலுக்கு உட்படுத்தி வருகின்றன.

நாட்டின் கீழ்மட்ட அரசாங்க கட்டமைப்புகளான பிரதேச சபை, மாகாண சபை போன்றவைகளின் அதிகார எல்லைகளுள் உட்படாதவர்களாகவே மலையக மக்கள் இருக்கின்றனர். அதே போல் மரபு ரீதியாக அரச நிர்வாக கட்டமைப்புகளில் கிராம உத்தியோகத்தர் முதற் கொண்டு பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம் வரை மலையக மக்கள் புறக்கணிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர். இந்த புறக்கணிப்பு வரலாற்றுக் காரணிகளுடன் உறவுக் கொண்டது. பிரித்தானியர் பெருந்தோட்டங்களை விசேட சட்டங்களுக்குக் கீழ் தனித்து ஆட்சி செய்து வந்தனர். அது இன்றுவரை அடிப்படை மாற்றங்கள் எதுவுமின்றி நீடிப்பதில் இருந்து மலையக மக்களைப் பொறுத்தவரை பிரித்தானிய ஆட்சியாளர்களுக்கும் உள்ளூர் ஆட்சியாளர்களுக்குமிடையிலான அரசியல் அடிப்படைகளின் 'வேறுபாட்டை' அறிந்துக் கொள்ளமுடியும். மேற்கூறிய அரசியல் நிர்வாக ரீதியான புறக்கணிப்பானது மலையக மக்களின் அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கலாசார விடயங்களில் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளன. தோட்டங்கள் நீண்டகால குத்தகையின் அடிப்படையில் தனியார் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில், JEDP மற்றும் SLSPC போன்ற அரச முதலீடுகளுடன் இயங்கும் சபைகளின் நடைமுறையும் இதே விதமாகவே உள்ளது. மலையக மக்கள் குடியிருப்பாளர்களாய் வாழும் தோட்டங்கள் குறித்த கம்பனிகளின் தனியுரிமையைக் கொண்டுள்ளன. எனவே கம்பனிகளின் அனுமதியின்றி அரசாங்கம் எந்த அபிவிருத்தி திட்டத்தையும் கம்பனியின் உரிமைக்குட்பட்ட காணியில் மேற்கொள்ள முடியாது.

**விஜயகுமார்**

அதற்கு கம்பனியின் அனுமதி கட்டாயமானதாகும். இந்தக் கட்டமைப்புச் சார் பிரச்சினையானது சுதந்திரத்திற்கு பின்பிருந்து இன்றுவரையும் ஆட்சிபீடம் ஏறிய முதலாளித்துவ பேரினவாத அரசாங்கங்கள் மலையக மக்களின் அபிவிருத்தியில் தம்மை அப்புறப்படுத்திக் கொள்ள வாய்ப்பாக போனது. அவர்கள் இந்த கட்டமைப்பை மாற்ற எந்தவித்திலும் கரிசனை கொள்ளவில்லை. இதனிடையே மலையக மக்களின் தலைவர்கள் எனப்படுவோர் இந்த பாரபட்சமான தொடர்பாக கொண்டிருந்த நிலைப்பாடு விசேட கவனத்தைப் பெறுகிறது.

மலையக மக்களின் தலைவர்கள் எனப்படுவோர் இந்த வரலாற்று ரீதியான கட்டமைப்புத் திணிப்பை பேரினவாதிகள் போலவே நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரித்து வந்துள்ளனர். மலையக மக்களின் பிரதான பிரச்சினையாக இருக்கின்ற இதனை எந்தருணத்திலும் அவர்கள் பேசியது கிடையாது. அவர்களின் "மக்கள் சேவை" வரலாற்றைக் கொண்டு நோக்குமிடத்து அதனை அவர்களிடம் இருந்து நாம் எதிர்பார்ப்பது என்பது அதிகமேதான். மலையக மக்களை தோட்ட நிர்வாகத்துக்குள் சிறைப்படுத்தி அதனூடாக தமது தொழிற்சங்க ஆதிக்கத்திற்குள் வைத்துக் கொள்ளவும் அதனை அடிப்படையாக்கி தமது அரசியல் மேலாதிக்கத்தை நிலை நிறுத்தவும் மலையகத்தில இவ்வித கட்டமைப்பு அவர்களுக்கு உதவியதோடு அது தொடர்ந்தும் நிலவுவது அவர்களுக்குத் தேவையாகவும் உள்ளது. எனவே இந்த பாரபட்சமான ஒடுக்குமுறைக் கட்டமைப்பை நிலை நிறுத்துவதில் பேரினவாத சக்திகளுக்கு சமாந்தரமாக மலையகத்தில் இருக்கின்ற பிற்போக்கு அரசியல் சக்திகள் கருவியாக உழைத்து வருகின்றன.

அந்த கடுமையான உழைப்பின் பயனாகவே தோட்ட மக்களை மீண்டும் தோட்ட நிர்வாகத்திற்குள் அடைத்துவைக்கின்ற கருவியாகச் செயற்பட்டு வருகின்ற பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை (PHDT) ட்ரஸ்ட் என்று பொதுவாக அறியப்படும் அமைப்பு உருவாக்கப்பட்டு நிலைபெற்று வருகிறது. அரசாங்கம் மலையக மக்களுக்கு நேரடியாக அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தடையாக இருப்பதனால் அதனைத் தீர்க்க அரசின் நிதி மற்றும் அனுசரணைகளுடனும் சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் நிதி உதவியோடும், பெருந்தோட்ட கம்பனிகள் மற்றும் மலையகத்தின் பெருந் தொழிற்சங்கத்தின் ஆதிக்கத்தின் கீழ் இது இயங்கி வருகிறது. மலையகத்தின் அபிவிருத்தி முகவராக 1992ல் இருந்து செயற்பட்டு வரும் இந்த உப கட்டமைப்பானது மலையக மக்களை தேசிய நீரோட்ட அரசியல் இருந்து தொடர்ந்து விலக்கிவைப்பதில் வெற்றிக் கண்டுள்ளது. குறிப்பாக மலையக மக்களின் ஏனைய பிரச்சினைகளை காணுவதில் இருந்தும் அப்பிரச்சினைகளைச் சுற்றி மக்கள் அணிதிரளுவதையும், ட்ரஸ்ட் அமைப்பின் வேறு நலன்புரிச் செயற்பாடுகள் தற்காலிகமாகத் தடுத்து வருகின்றன.

மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அரசே தொடர்ந்தும் தடுமாறிக் கொண்டு வரும் நிலையில் மலையக மக்களின் முன்னேற்றத்தை ஆதிக்க நோக்கத்தை முன்னிறுத்திய இவ்வகை நிறுவனங்களினால் சாத்தியப்படுத்த முடியாது என்பதில் எவ்வித ஐயமும் இருக்க முடியாது. மலையக மக்களின் வரலாற்றுக் கொடுமைகளின் ஒன்றாக காணப்படும் இந்த கட்டமைப்புத் திணிப்பு நீக்கப்பட வேண்டுமாயின் மலையக மக்களுக்கும் தோட்ட நிர்வாகத்துக்கும் தொழிலாளர் - தொழில் வழங்குநர் என்ற உறவுக்கு அப்பால் இருக்கின்ற மரபு ரீதியான உறவுகள் துண்டிக்கப்பட்டு, மலையக மக்கள் வாழும் தோட்டப் பிரதேசங்கள் கிராமங்களாக்கப்பட வேண்டும். இவ்வாறு கிராமங்கள் உருவாக்கும் போது அவர்களுக்கு காணி மற்றும் வீட்டுரிமைகள் உறுதிசெய்யப்படுவதன் மூலமே ஏனைய தேசிய இனங்களைப் போலவே மலையக மக்கள் என்ற தேசிய இனமும் சம அந்தஸ்துடன் வாழ முடியும்.

## புரட்சி என்பது சாத்தியம் தானா?

சுரண்டும் ஒவ்வொரு
முதலாளிகளினதும்
குடிக்கின்ற அட்டைகளை
பிடுங்கி எறிவது
சாத்தியமெனின்
புரட்சி என்பது சாத்தியம் தான்.

தலைமைகளுக்கு மீறி
அழுத்தும்
கொழுத்துப் பையை
தூக்கி எறிவது
சாத்தியமெனின்
புரட்சி என்பது சாத்தியம் தான்

பேரினவாதக் குருக்களின்
முன்னே தலைநிமிர்வது
சாத்தியமெனின்
புரட்சி என்பது சாத்தியம் தான்

கிராம உரிமைகளுக்கு
எதிரான கல்விமுறைகள்
சாத்தியமெனின்
புரட்சி என்பது சாத்தியம் தான்

கொடுமைக்கு எதிராக
குரல் உயர்த்தல்
சாத்தியமெனின்
புரட்சி என்பது சாத்தியம் தான்

அடக்குமுறையின் வன்மை
முனைப்புகளையும் முறியடிக்க
முன்வருவது
சாத்தியமெனின்
புரட்சி என்பது சாத்தியம் தான்

எப்போது
கிழக்கில் விடியலாய்
எழுந்து நிற்பது
சாத்தியமெனின்
புரட்சி என்பது சாத்தியம் தான்

கிருஷ்ணா
2011.10.02

# "சட்டம் அனைவருக்கும் சமம்"

"சட்டத்தின் முன்பு ஆட்கள் எல்லோரும் சமமானவர்கள்; அத்துடன் அவர்கள் சட்டத்தினால் பாதுகாக்கப்படுவதற்கும் உரித்துடையவர்கள்."

இவ்வாறாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 12ம் உறுப்புரையின் 1ம் உபஉறுப்புரை கூறுகிறது.

❖ கடந்த 05.09.2011 அன்று உயர்தரப் பரீட்சைகளின் இறுதிப் பரீட்சை நடைபெற்றது. அன்றைய தினம் ஹட்டன் நகரில் நின்றிருந்தேன். பாடசாலை வாழ்க்கை அன்றோடு முடிகின்ற சந்தோசத்தில் மாணவர்கள் ஒருவர் மீது ஒருவர் மை பூசி விளையாடிக் கொண்டிருந்தனர். சட்டத்தின் நீதியின் மக்களின் காவலர்களும் நண்பர்களுமான பொலிசார் அந்த மாணவர்களை அமைதிக்கு பங்கம் விளைவித்ததற்காக கைது செய்தனர்.

❖ அடுத்த சில தினங்களுக்குப் பிறகு பொது இடத்தில் புகைப்பிடித்தமைக்காக ஒரு மனிதர் கைது செய்யப்பட்டார்.

❖ வெள்ளவத்தை காலி வீதியில் வீதி ஒழுங்கை மீறியதற்காக நான்கு இளைஞர்கள் 2500 ரூபா தண்டப்பணம் செலுத்தினார்கள்.

❖ எமது நாட்டின் அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் மொத்த சனத்தின் பாதுகாப்பின் பொருட்டு போதைக்கு முற்றுப் புள்ளி வைக்க எத்தனித்துள்ளார். போதைக்கெதிரான பிரசாரங்கள் செய்யப்படுகிறது. பௌர்ணமி தினங்களில் மதுபானம் அருந்துவது தடைசெய்யப்பட்டுள்ளது.

❖ இந்த முப்பது வருட கால இன முரண்பாட்டு யுத்தத்தில் இலட்சக்கணக்கான அப்பாவி தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் தமது உயிர்களை இழந்துள்ளனர்.

❖ இக்காலப்பகுதியில் வாழ்க்கைத் துணைகளை, தாய் தந்தையரை, பிள்ளைகளை, சகோதரரை, உடைமைகளை இழந்தவர்கள் பல இலட்சம் பேர்.

❖ இக் கொடூர யுத்தத்தின் காரணமாக ஜனநாயக முற்போக்கு சக்திகள், புத்தி ஜீவிகள், அரசியல் தொழிற்சங்கவாதிகள், ஊடகவியலாளர்கள் என பலர் உயிரிழந்துள்ளனர். பாரிய ஒடுக்குமுறைக்கும் உயிர் அச்சுறுத்தலுக்கும் சுதந்திரமற்ற தன்மைக்கும் கைதுகளுக்கும் ஆளாகியுள்ளனர்.

❖ எத்தனையோ பேர் கடத்தப்பட்டனர். காணாமற் போயினர். கொலையும் புரியப்பட்டனர்.

❖ பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் இன்றும் எவ்வித விசாரணையும் இன்றி அரசியல் கைதிகளாக இலங்கைச் சிறைகளில் வாடுகின்றனர். மீள் குடியமர்த்தப்படாத மக்கள் இன்றும் முகாம்களில் வாடுகின்றனர்.

❖ முப்பது வருட காலத்தில் மக்கள் தமது வாழ்கை அச்சத்தின் மத்தியிலும் சந்தேகத்தின் மத்தியிலுமே கழித்தனர். லட்சக்கணக்கில் மக்கள் புலம் பெயர்ந்தனர்.

❖ இதற்கெல்லாம் மேலாக இனங்களிடையேயான நல்லுறவு இல்லாமற் போய் ஒரு இனம் இன்னொரு இனத்தை சந்தேகத்தோடு பார்ப்பதும் பண்பாட்டு தொடர்பற்ற இனக் குழுக்களாக சிதறி வாழ்கின்ற சமூக அவலத்தை ஏற்படுத்தியும் உள்ளது.

➢ இக் குற்றங்களைப் புரிந்தவர் யார்?
➢ அவர்களுக்கு துணை புரிந்தவர் யார்?
➢ குற்றவாளிகளை தண்டிப்பது யார்?
➢ பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பது யார்?

இப்படி பல கேள்விகள் எம்முள் எழலாம். எனினும் நாம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டியது ஒன்றுதான். சட்டம், சட்டத்தை நிர்வகிக்கும் நிறுவனங்கள் நடுநிலையற்றவை; அனைத்துமே சுரண்டல் மிக்க ஆதிக்க பேரினவாத ஏகாதிபத்திய அடிவருடிகளினால் ஆக்கப்பட்டவையும், அவர்களை பாதுகாப்பவையும் ஆகும்.

எனவே நாம் செய்ய வேண்டியது சட்டத்தை முற்று முழுதாக நம்பிக் கொண்டிருப்பதல்ல. மாறாக இவ்வமைப்பு முறையை மாற்றியமைத்து வெகுஜனங்களுடைய அரசை தாபிப்பதாகும்.

வல்லவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம் படைத்தோர் பட்டம் பெற்றுக் கொள்ளும் தனியார் மருத்துவக் கல்லூரி வேண்டாம்!

தனியார் மருத்துவக் கல்லூரி முறைமையைக் கொண்டு வந்தே தீருவோம் என மகிந்த சிந்தனை அரசாங்கம் கங்கணம் கட்டி நிற்கிறது. அரசாங்கம் எடுத்து வரும் ஒவ்வொரு நடவடிக்கையும் மக்கள் விரோதப் பாதையிலேயே போகிறது. அதுமட்டுமல்ல, உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திசநாயக்கா யார் எதிர்த்தாலும் எவர் மறித்தாலும் தனியார் மருத்துவக் கல்லூரியைக் கொண்டுவந்தே தீருவேன் என சபதம் செய்து நிற்பதை நாம் காண முடிகிறது. அதன் பயனாக, அமைச்சர் திசநாயக்கா தனியார் மருத்துவக் கல்லூரிக்கான அமைச்சரா அல்லது உயர் கல்வி அமைச்சரா என்று பல்கலைக்கழக மாணவர்களும் ஆசிரியர்களும் பெற்றோரும் கேள்வி எழுப்புகின்றனர். தனியார் மருத்துவக் கல்லூரி இலவசக் கல்விக்குச் சாவு மணியோசை ஆகும். பணத்தை வாரி இறைத்துத் தரமற்ற மருத்துவப் பட்டதாரிகள் உருவாக்கப்படுவர் எனவும் தனியார் மருத்துவமனைகளால் மக்களது இலவச மருத்துவம் நாளடைவில் சாகடிக்கப்படும் எனவும் அஞ்சப்படுகிறது. பல்கலைக்கழக மாணவர்களும் ஆசிரியர்களும், பெற்றோரும் மட்டுமன்றி அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கமும் தனியார் மருத்துவக் கல்லூரி உருவாக்கத்திற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். எனவே தனியார் மருத்துவக் கல்லூரி கொண்டுவரப்படுவதை நாம் அனைவரும் ஏகோபித்த பாண்மையான உழைக்கும் மக்கள் சார்பாக எதிர்த்து நிற்போம்.

இலங்கையின் மருத்துவக் கல்லூரிகளின் தொகையும் வருடாந்தம் அங்கிருந்து வெளிவரும் மருத்துவப் பட்டதாரிகளின் தொகையும் பிற ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகை யில் குறைவாகவே உள்ளது. நாட்டின் உடல் நலத்துறை நோய்த் தடுப்பிலும் நோய் பரவுதலைக் கட்டுப்படுத்துவதிலும் செலவிடும் தொகை, சனத்தொகையுடனும் பெருகி வரும் தேவையுடனும் ஒப்பிடும் போது குறைந்து கொண்டே போகிறது.

அரசாங்க மருத்துவமனைகளில் இட வசதியின்மை, மருந்துகள் போதாமை போன்ற குறைபாடுகளாலும் சில பிரதேசங்களில் போதிய மருத்துவக் கவனிப்பு இல்லாதாலும் பொருள் வசதியுள்ளோர் மட்டுமன்றி ஓரளவு வசதி குறைந்தோரும் தனியார் மருத்துவமனைகளை நாடுகின்றனர். எனினும் 1978இல் திறந்த பொருளாதாரக் கொள்கையும் தனியார்மயமும் அரசாங்க மருத்துவத் துறையின் தனியார் மருத்துவ ஆலோசனையும் சேவையையும் வழங்குதலை ஊக்குவித்ததுடன் அரசாங்க மருத்துவத் துறையில் முதலீட்டைக் குறைக்கத் தொடங்கியது. நம் நுகர்வுப் பொருளாதாரத்தின் எழுச்சியாலும் தனியார் மருத்துவம் இப்போது மிகவும் வளர்ச்சியுற்றுள்ளது. பொருள் வசதி குறைந்தோருக்கு மருத்துவ வசதியை மறுக்கிற ஒரு நிலையை நோக்கி நமது மருத்துவத் துறை சென்று கொண்டிருக்கிறது.

மருத்துவர்கட்கு ஒரு சமூக அந்தஸ்தும் குறைவில்லாத வருமானமும் இருந்து வந்தமையாலேயே பல மாணவர்களும் அத் துறையை நாடிவந்தனர். 1978இற்கு பிறகு, குறிப்பாகக் கடந்த பதினைந்திருபது ஆண்டுகளில் அது கொள்ளை இலாபம் குவிக்கும் துறையாகிவிட்டது. மருத்துவம் வணிகமயப்பட்டு மருத்துவர்களும் அவ் வணிகத் துறையின் ஒரு அங்கமாகி விட்டனர்.

நமது நாட்டின் தனியார்மயமாக்கற் கொள்கையானது ஏகாதிபத்தியத்தினதும் அதன் முகவர் அமைப்புகளினதும் நெருக்குவாரங்களின் கீழ் நடைபெறுவது என்பதை நாம் அறிவோம். அதன் ஒரு பகுதியாகவே தனியார் பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும் நேரடியாகவும் மறைமுகமாகவும் நாட்டில் செயற்படுகின்றன. எனினும், பொறியியல், மருத்துவம் போன்ற துறைகளில் தனியார் கல்விக்குத் தடையாக அமைந்தது தேவைகள் உள்ளன. ஆய்வுகூட வசதிகளும் பட்டறைகளும் கல்விசார் மருத்துவமனைகளும் நிறுவவும் நடத்துதல் செலவு மிகுந்தவை.

1970கள் வரை இத் துறையில் நாட்டிற்கு பணியாற்றும்




தொழிற் தகுதி பெற்றவர்கள் தேவை என்பதனாலேயே அரசாங்கங்கள் முதலிட்டன. இப்போது அரசாங்கத்தின் அணுகுமுறை வேறு. உயர் கல்வி என்பதற்கு ஒரு தேசியப் பொருளாதார, சமூகவியல் நோக்கு இல்லாது அதையும் வணிகப் பண்டமாகவே நோக்குமாறு அரசாங்கங்கள் ஏகாதிபத்திய நெருக்குவாரத்திற்கு உட்படுகின்றன. பொதுமக்களோ இன்னமும் உயர் கல்வியை –குறிப்பாக மருத்துவத்தை– ஒரு முக்கிய சமூக சேவையாகவே நோக்குகின்றனர். எனவே அரசாங்கங்களால் மருத்துவக் கல்வியை இலவசக் கல்வித் முறையிலிருந்து திட்டமிட்டு நேரடியாக விலக்கிவிட இயலாதுள்ளது. எனவே தனியார் மருத்துவக் கல்லூரிகளை நிறுவும் முயற்சிகள் பல காலங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

1980 அளவில் கொழும்பை அண்டிய ராகம வைத்தியசாலையைப் பயன்படுத்தும் ஒரு தனியார் மருத்துவக் கல்லூரி உருவாக்கப்பட்டது. எனினும் நாட்டின் மருத்துவ துறை மாணவர்களதும் ஆசிரியர்களதும் அரசாங்க மருத்துவர்களதும் கடும் எதிர்ப்பும் மக்களுடைய பொதுவான எதிர்ப்புணர்வும் சேர்ந்து அந்த தனியார் மருத்துவக் கல்லூரிக்கு முடிவு கண்டன. இப்போது ராகம வைத்தியசாலை களனிப் பல்கலைக்கழகத்தின் கல்விக் தேவைகளுக்கு உதவுகிறது. இவ்வாறு பாரிய சூடாநாட்டில் ஒரு தனியார் மருத்துவமனையை நிறுவும் முயற்சியும் முறியடிக்கப்பட்டது.

அந்த தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தவர்களையும் எதிர்ப்பு தெரிவித்த கட்சிகளையும் கொண்ட ஒரு அரசாங்கம் மாலபேயில் ஒரு தனியார் மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி வழங்கி அது தொடக்கப் பட்டுள்ளது. அதற்குரிய மருத்துவமனை ஒன்றின் பணிகள் மும்முரமாகியுள்ள நிலையில் நாட்டின் மருத்துவத் துறை மாணவர்களும் இலங்கை அரசாங்க மருத்துவ அலுவலர்கள் சங்கமும் என்ற மருத்துவத் துறை தொழிற் சங்கமும் இணைந்து தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தியுள்ளன. அது மிகச் சரியானதும் வரவேற்கவேண்டியதுமாகும்.

இந்த தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்களிடம் அறவிடப்படும் கட்டணம் மொத்தம் 60 இலட்சம் ரூபா. இது வெளிநாடுகட்கு அனுப்பி படிப்பிக்கும் செலவிலும் குறைவானது, எனினும் ஏராளமானது. இப்படிச் செலவு செய்து மருத்துவர்களாக வருபவர்களிடம் நாம் எதை எதிர்பார்க்கலாம். போட்ட முதலுக்கு மேலாகப் பொருளீட்டும் இலாப நோக்கத்தையா அல்லது கருணையுள்ள மருத்துவம் வழங்கலையா? பணத்தை மட்டுமே குறிக்கும் நோக்குடைய மனித நேயமற்ற மருத்துவர்களை உருவாக்க முனைகிற தனியார் மருத்துவக் கல்லூரி நமக்குத் தேவையா?

அதைவிட முக்கியமாக, இவ்வாறு நிறுவப்படும் மருத்துவக் கல்லூரிகளில் பண முதலைகளான பெரும் புள்ளிகளின் பிள்ளைகளே பயிலுவார்கள். அவற்றின் தொகை பெருகும் போது தகுதி பெற்ற பேராசிரியர்களையும் நிபுணர்களையும் அவைக் கூடிய சம்பளத்திற்கு கவருவதன் பயனாக, நாட்டின் அரசாங்க மருத்துவக் கல்லூரிகளின் தரம் தாழ்ந்து விடும். ஏனவே வடக்கு, கிழக்கு, வட மத்திய பல்கலைக்கழகங்களின் மருத்துவக் கல்லூரிகட்கு போதுமான அரசாங்க உதவி இல்லாத நிலையில், தனியார் மருத்துவக் கல்லூரிகளின் வருகை நல்ல மருத்துவர்களைப் பண முடையோருக்கானதாக்கி விடுவது போல, மருத்துவக் கல்வியையும் பணமுடையோருக்காக்கிவிடும் என்ற அச்சம் நியாயமானது. அதனால் இலவசக் கல்வி மூலமான மருத்துவத் துறை படிப்படியாகச் சீரழிக்கப்படும்.

எனவே மாணவர்களதும் மருத்துவத் துறையினரதும் எதிர்ப்பு மிகச் சரியானதும் மக்களால் ஆதரிக்கப்பட வேண்டியதுமாகும். நாமும் நமது வலிமையான எதிர்ப்புடன் இணைந்து அத்துடன் நிற்போம்.

# வடபுலத்தில் ஒரு தனி இராச்சியம்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கியதே வடபுலம் எனப்படும் வட மாகாணமாகும். இங்கே தற்போது முன்னெடுக்கப்படும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை அவதானிக்கும்போது, அங்கே ஒருவகையான தனி இராச்சியம் நடாத்தப்படுவது போன்றே காணப்படுகிறது.

முன்பு புலிகள் இயக்கம் பல்வேறு செயற்பாடுகளை தமிழீழத்தின் பெயரால் தமக்கான தனி நிர்வாகத்தைப் பல துறைகளிலும் ஏற்படுத்தி தனி இராச்சியம் போன்று நடாத்தி மக்களின் மேல் திணித்தனர். மக்களின் அன்றாட வாழ்விலும் அரசாங்க நிர்வாகத்திலும் அவர்களது அச்சுறுத்தல்களும் அவற்றுக்கும் அப்பால் தண்டனைகள் என்பவையும் இருந்து வந்தன. அவை பற்றிக் கருத்துக் கூறும் சுதந்திரமோ ஜனநாயக நடைமுறைகளோ பின் பற்றப்படவில்லை. மக்களின் கருத்துக்கள் விருப்பங்கள் எதுவும் கேட்கப்படவில்லை. புலிகளின் புலனாய்வுத்துறை சகல நிலைகளிலும் மக்களை கண்காணித்து வந்தது. மக்கள் உணவுக்கு மட்டும் வாய் திறக்கவேண்டி இருந்ததே தவிர மாற்றுக் கருத்தைத் தப்பித் தவறிக்கூறும் முன்வைக்க அவர்கள் அனுமதிக்கவில்லை. அதன் ஒட்டு மொத்த விளைவு மக்களது எதிர்ப்பை வளர்த்துக் கொண்டதேயாகும்.

2009 மே 19ல் புலிகள் இறுதித் தோல்வி கண்ட பின்பு மகிந்த சிந்தனை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வடக்கும் அதற்கு முன்பு கிழக்கும் வந்துகொண்டன. கடந்த இரண்டு ஆண்டுகளாக வடக்கில் இராணுவ நிர்வாகம் சகலவற்றிலும் மேலாண்மை செலுத்தி வருகிறது. ஐந்து மாவட்டத்திலும் அரசாங்க அதிபர் என்பவர் அரசாங்கத்தின் அரசியல் போக்கிற்கு ஏற்றவராகவே நியமிக்கப்படுவது ஏற்கனவே நடைமுறையில் இருந்து வருவதாகும். இப்போது வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட்ட பின்பு அவ்விரு மாகாணங்களுக்குமான ஆளுனர், அரசாங்க அதிபர்கள், இராணுவக் கட்டளைத் தளபதி, அமைச்சர் ஒருவர், இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் என்போடு ஜனாதிபதியினதும் அமைச்சர்களதும் உயர் அதிகாரிகளினதும் முடிவுகளைச் செயற்படுத்துபவர்களாக உள்ளனர். இராணுவ பொலிஸ் புலனாய்வுகள் கண்காணிப்பை அதிகரித்துக் கொள்வதுடன் மூலை முடுக்கெல்லாம் அவர்களின் கண்களில் இருந்து தப்ப முடியாதபடி புல்லொன்றும் ஆராயப்படுகிறது. முன்பு புலிகள் எவ்வாறு துப்பாக்கி மூலம் ஆதிக்க நிர்வாகம் நடாத்தி இயல்பு வாழ்வையும், ஜனநாயகத்தையும் கட்டுப்படுத்தி மறுத்து வந்தார்களோ அதே விதமான நடைமுறைகளே இன்று அரசாங்க இராணுவ நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்படுகிறது. புலிகளை அழித்து விட்டதாகக் கூறுவோர் புலிகளின் நடைமுறைகளை வடக்கில் பின்பற்றுகின்றனர் என்பது தான் முரண்நகையாக இருக்கின்றது.

மக்கள் தொடர்ந்து பயப்பீதியுடனும் அடங்கி ஒடுங்கியபடி வாழவேண்டும் என்பதையே இராணுவ நிர்வாகம் விரும்புகிறது. அவ்வாறு மக்களை தொடர்ந்து அச்ச நிலையில் வைத்திருப்பதன் மூலம் தமது உள்ளார்ந்த பேரினவாத ஆளும் வர்க்க முடிவுகளைச் செயற்படுத்த லாமென நம்புகின்றனர். ஒரே தேசம், ஒரே மக்கள் என்பதன் ஊடாக வடக்கு கிழக்கின் தனித்துவங்களையும் பாரம்பரியப் பிரதேச அடையாளங்களையும் அழிப்பதில் அவர்கள் அக்கறையாக உள்ளனர். கடந்த வருடத்திற் கொலைகள், ஆட்கடத்தல்கள், கொள்ளைகள் என்பன குறிப்பிட்ட காலம் வரை தலை விரித்தாடின. சிலகாலம் அவ்வாறு இடம்பெற்று உச்சக் கட்டத்தின் போது வீதிச் சோதனையும் இராணுவ பொலிஸ் ரோந்தும் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டன. அவற்றால் மக்கள் தமது நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டியதாயிற்று. அந்நிலை சற்று ஓய்ந்து ஓரளவுக்கு மக்கள் நிம்மதி எனக் கூறிக்கொண்ட சந்தர்ப்பத்தில் "மர்ம மனிதன்" "கிறீஸ் பூதம்" என்பவை கட்டவிழ்த்து விடப்பட்டன. அவர்கள் யார், என்ன செய்கிறார்கள். அவர்களின் நோக்கம் என்ன என்பதெல்லாம் மக்கள் மத்தியில் வெளிச்சமாகிக் கொண்டது. மக்கள் துணிந்து விரட்டி வந்து மர்ம மனிதர்களைத் துரத்திப் பிடிக்க முற்பட்டபோது இராணுவமும் பொலிசும் அவர்களைப் பாதுகாத்துக்கொண்டன. மக்கள் அணிதிரண்டு எதிர் நடவடிக்கையில் இறங்கியபோது சட்டத்தைக் கையிலெடுக்க வேண்டாமென அரசாங்கமும் பொலிஸ் இராணுவமும் எச்சரித்தன. அமைச்சர்கள் பக்கப்பாட்டுப்பாடினர். நாங்கள் எதையும் எப்படியும் செய்வோம், நீங்கள் மாற்றுப்போ எதிர்ப்போ தெரிவிக்கக் கூடாது. மீறினால் நமது கைவரிசையைக் காட்டுவோம் என்ற விதமாகவே பல சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

இப்போது மர்ம மனிதர்களைப் பிடிப்பதற்கு அன்றி கள்வர்களைப் பிடிக்கப் பொலிஸ் பொதுமக்கள் குழுக்களென அமைக்கப்படுகின்றன. இவை யாவும் மக்களின் அன்றாட இயல்பு வாழ்வுக்கு மக்கள் வந்து கொண்டிருப்பதை தடுப்பவையாகும். மேற்கூறிய ஐந்து மாவட்டங்களும் அரசாங்க இராணுவக் கண்காணிப்பின் கீழ் தனிராச்சியம் போன்றே நடத்தப்படுகின்றன. அன்று புலிக்கொடி இராச்சியம் என்றால் இன்று சிங்கக்கொடி இராச்சியம் என்றே மக்கள் மத்தியில் பேசிக்கொள்ளப்படுகிறது. எவ்வாறாயினும் அரசாங்கத்தின் மக்களுக்கு எதிரான எந்தொரு அடக்குமுறையும் எந்தவொரு செயற்பாடும் வெற்றிபெறமாட்டாது என்பதே விழிப்பும் எழுச்சியும் பெற்ற உலக மக்கள் தந்த வரலாற்றுப் பாடமாகும். அதனை உழைக்கும் மக்கள் படித்துக் கொள்வது இன்றைய தேவையாகும்.

வா நவத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.வில் ஜனாதிபதி

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐ.நா.வில் உரையாற்றிய போது, இலங்கை அரசின் மீதான சர்வதேச குற்றச் சாட்டுகள் இலங்கையின் நற்பெயருக்குக் களங்கம் கற்பிப்பவை என்றும் இன்று புலிப் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்ட பிறகு, நாட்டின் பல இன மக்களும் பயமின்றி வாழ்வதாகவும் போர் முடிந்து இரண்டரை வருடங்களுக்குள் 95 சதவீதமான மக்கள் மீளக் குடியேற்றப்பட்டுள்ளனர் என்றும் கூறியுள்ளார்.

சர்வதேச சமூகம் சாட்டும் குற்றங்கள் பொய்யானவை என்று ராஜபக்ஷ சொல்லுவதால் அவை பொய்யாகி விடப் போவதில்லை. போரின் இரு தரப்பினரும் பாரிய குற்றங்களைச் செய்துள்ளனர் என்பதை ஐநா நிபுணர் குழு சுட்டிக் காட்டியுள்ளது. எனவே புலிகளைக் குற்றஞ் சாட்டாமல் அரசாங்கத்தின் மீது பழி கூறுவதாக முறைப் படுவது வேறு நாடுகளிடம் எடுபடப் போவதில்லை. அதே வேளை, போர்க் குற்ற மனித உரிமை மீறல் விசாரணைகள் பற்றி மேற்குலகும் ஐ.நா. சபையும் செலுத்துகிற நெருக்குவாரங்கள் இலங்கைத் தமிழ் மீதோ போரால் பாதிக்கப்பட்டோர் மீதோ உள்ள அக்கறையால் அல்ல என்பதை நாம் மறக்கலாகாது. நாட்டில் எவ்வளவு தூரம் அமைதி நிலவுகிறது என்பதை வடக்கிலும் கிழக்கிலும் மக்கள் எவ்வளவு மன அழுத்திற்கு உட்படுகின்றனர் என்பதை அறிந்தோர் அறிவர். அண்மைய கிறீஸ் பூத நிகழ்வுகள் மட்டுமல்லாமல் அரசியற் கலந்துரையாடல்களை நடத்துவதற்கும் கூட்டங்களை நடத்துவதற்கும் அரசாங்கம் நேரடியாகவும் மறைமுகமாகவும் இட்டு வருகின்ற தடைகள் நிச்சயமாக சுமுகமான ஒரு சூழலின் அறிகுறிகள் அல்ல.

மீள் குடியேற்றம் பற்றிக் கூறப்பட்டுள்ள கருத்தும் இலங்கை போருக்கு பின்பான மீள் குடியேற்றத்தை எவ்வளவு முன்மாதிரியாக செய்து முடித்துள்ளது என்ற வெற்று பிதற்றலும் நம்ப விரும்புபவர்கள் மட்டுமே நம்பக் கூடியவை. முகாம் வாழ்க்கை விட அவலமான வாழ்க்கையே மீளக் குடியேற்றப்பட்ட மக்கள் அனுபவிக்கின்றார்கள் என்பதை அவர்களைக் கண்டு கதைத்தவர்கள் அறிவார்கள்.

எனவே ஜனாதிபதி சொன்னவை சர்வதேச சமூகத்தின் நுகர்வுக்கானவையா அல்லது உள்நாட்டு நுகர்வுக்கானவையா என்பதை நாம் ஓரளவு ஊகித்துக் கொள்ளலாம். சர்வதேச சமூகம் எனப்படும் ஏகாதிபத்திய நாடுகள் இலங்கை அரசின் மீது நெருக்குவாரங்கள் கொடுப்பதன் நோக்கம் பற்றி நாம் அறிய வேண்டும். அது இலங்கை அரசாங்கத்தை மேற்குலகுக்குப் பணிய வைக்கும் நோக்கம் கொண்டது என்பதில் ஐயமில்லை. இலங்கைக்கு அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கான பல்வேறு கடன் திட்டங்களும், சர்வதேச நாணய நிதியத்தின் கடன்களும் வழங்கப்படுகின்றன. அமெரிக்கா தண்டிக்க விரும்புகின்ற நாடுகள் மீது விதிக்கப்பட்ட எவ்விதமான பொருளாதாரத் தடையும் போரின் மோசமான காலத்திலோ போரின் பின்பு மக்கள் அகதி முகாம்களில் விலங்குகள் போல நடத்தப்பட்ட போதோ மேற்கொள்ளப்படவில்லை. எனவே ஒரு புறம் இலங்கையை மேலும் கடனாளியாக்கி ஏகாதிபத்திய உலகமயமாதலும் பொருளாதாரத்திற்குள் பூரணமாக இழுக்கும் வேலைகள் நடக்கிறதை நாம் அறியலாம்.

இப்போது இலங்கைக் கான ஐ.நா. தூதர் சவேந்திர சில்வா மீது அமெரிக்காவில் மனித உரிமை வழக்குகள் தாக்கலாகியுள்ளன. முதலில், அதை எவ்வாறு நீதி மன்றத்தில் எதிர்கொள்வோம் என்று வாய்வீரம் பேசிய அந்த முன்னாள் ராணுவ அதிகாரி இப்போது இராஜதந்திரி என்ற அடிப்படையில் வழக்கு விசாரணையில் இருந்து விலக்குப் பெற முயல்கிறார். இலங்கை அரசாங்கம் சென்ற ஆண்டு மேற்குலகிற்கு எதிராகப் பேசிய வாய்வீரமும் கொஞ்சம் அடங்கியுள்ளது. ஐ.நா. சபைக்கும் மேற்கு நாடுகளுக்கும் எதிரான சிந்தனைகளும் ஆர்ப்பாட்டங்களும் பெருமளவும் குறைந்து விட்டன. ஆனால் மேற்குலக நெருக்குவாரம் குறைந்துள்ளது. இதை நாம் இலங்கை மீது ஆதிக்கம் செலுத்துவதற்கான சர்வதேச வல்லரசு போட்டியுடன் சேர்த்து நோக்கினால் மேலும் உண்மைகள் வெளிப்படலாம். ஒன்று மட்டும் நிச்சயம். மேற்குலகின் நோக்கம் தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதல்ல. எனவே இவ் விடயம் எந்தத் திசையில் போனாலும் தமிழ் மக்கள் மகிழ ஒன்றும் இருக்காது. மாறாக இலங்கைக்குள்ளேயே போர்க் குற்றங்களும் மனித உரிமை மீறல்களும் பற்றிய நம்பகமான, ஒழுங்குமுறையான ஒரு விசாரணை மேற்கொள்ளப்படுமானால், மீளக்குடியேற்றம் என்பது பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்வையும் வாழ்வாதாரங்களையும் உறுதிப்படுத்துவதாக இருந்தால், அடக்குமுறைச் சட்டங்கள் நீக்கப்பட்டுத் தேசிய இனப் பிரச்சினைக்கு அந்தரங்க சுத்தியான ஒரு தீர்வு தேடப்படுமானால், நாட்டின் அனைத்து மக்களும் அந்நியக் குறுக்கீட்டையும் நெருக்குவாரங்களையும் முழுமனதாக ஒன்றுபட்டு எதிர்க்கும் நிலை உருவாகும். அது நாட்டின் உண்மையான சுதந்திரத்தை உறுதிப்படுத்தும்.

மோகன்

# 1966 ஒக்ரோபர் 21 எழுச்சியின் சமகால முக்கியத்துவம்

1917ல் தோழர் லெனின் தலைமையில் மாபெரும் ரஷ்ய ஒக்ரோபர் புரட்சி வெற்றிப் பெற்று 94 ஆண்டுகள் ஆகின்றன. 1949 ஒக்ரோபர் முதல் திகதியன்று தோழர் மா ஓ சேதுங் தலைமையில் மகத்தான சீனப் புரட்சி வெற்றிப் பெற்று 62 ஆண்டுகள் ஆகின்றன. உன்னதமான அப்புரட்சிகளின் பாதையில் பயணித்த நாடுகளும் மக்களும் தம்மை அடிமைத் தளைகளில் இருந்து விடுவித்து சுதந்திர மனிதர்களாகிக் கொண்டனர். இன்றும் அப்புரட்சிகளுக்கு வழிகாட்டி நின்ற மாச்சிம் லெனினிசம் மா ஓ சேதுங் சிந்தனையின் ஒளியில் உலகின் நாலா திசைகளிலும் மக்கள் போராடி வருகின்றார்கள்.

நமது நாட்டிலும் பல்வேறு வகைப்பட்ட போராட்டங்கள் இடம்பெற்று வந்துள்ளனவெனில் அவை மேற்கூறிய புரட்சிகள் மீதான ஈர்ப்புகளினாலும் அதிர்வுகளில் இருந்துமே வெடித்தெழுந்தன என்பது மறுப்பதற்கில்லை. இத்தகைய ஒரு சூழலிலேயே இலங்கையில் இடது சாரி இயக்கமும் பொதுவுடைமை கட்சியும் தோன்றி வளர்ந்தன. இக்கட்சி 1964ல் புரட்சிப் பாதையா பாராளுமன்றப் பாதையா எனும் விவாதத்தில் பிளவுப்பட்டது. அவ்வாறான நிலையில் தோன்றியதே புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியாகும். மாக்சிசம் லெனினிசத்தையும் மா ஓ சேதுங் சிந்தனையையும் ஏற்று முன்சென்ற கட்சி அறுபதுகளின் நடுக்கூறிலே சமூக தளத்தில் இருந்து வந்த சாதிய முரண்பாட்டிற்கான போராட்ட முனையைத் திறந்து வைத்தது.

1966 ஒக்ரோபர் 21ம் திகதியன்று இப்புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி "சாதி அமைப்புத் தகரட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும்" எனும் சாதிய தீண்டாமையை எதிர்த்து போராட்ட பதாகையை உயர்த்தி முன்சென்றது. சுன்னாகத்தில் இருந்து யாழ் நகர் நோக்கிச் செல்ல வீர நடைபோட்ட ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கலந்துக் கொண்ட அவ் ஊர்வலத்தை பொலிஸ் தாக்கி இரத்தம் சிந்த வைத்தது. மக்கள் பயந்தோ பணிந்தோ பின்வாங்கவில்லை. துணிந்து நின்றனர். மீண்டும் யாழ் நகர் நோக்கி ஊர்வலம் சென்றது. யாழ் நகரில் பெரும் கூட்டம் நடைபெற்றது. சாதியத்தை எதிர்த்து தீண்டாமையை முறியடிக்கும் போராட்ட அறைகூவல் விடுக்கப்பட்டது. இதனை மாக்சிய லெனினிசக் கட்சியின் அன்றைய பொது செயலாளர் தோழர் நா. சண்முகதாசன் அக்கூட்டத்தில் வெளியிட்டார். சாதிய தீண்டமை அடக்குமுறையையும் அடிமை தனத்தையும் எதிர்த்து தாழ்த்தப்பட்ட மக்கள் போராட வேண்டும் என்றும் அதற்கு புரட்சிகர கமியூனிஸ்ட் கட்சி வழிகாட்டும் என்றும் அவ்வறை கூவல் கூறியது. அது போராட்டப் பிரகடனமும் ஆகியது.

அவ் அறைகூவல்விடுக்கப் பெற்று இப்போது 45 ஆண்டுகள்ஆகின்றன. அதன் போராட்டங்கள் கடுமையான சவால்களை முறியடித்து வெற்றிபெற்றுக்கொண்டன. அதற்கு இருக்கக்கூடிய சமகால முக்கியத்துவம் இவ் வேளையில் நோக்கப்பட வேண்டியதாகும். ஆண்டாண்டுகால சாதிய அடிமைத்தனத்தின் கீழ் கொடிய தீண்டாமையின் கோரப்பிடியில் சிக்கியிருந்த மக்கள் போராட்டங்களில் எழுந்தனர். ஜனநாயகம், சுதந்திரம், மனித உரிமை மற்றும் சமத்துவம் என்பவற்றை வென்றெடுப்பதே அவ்வெழுச்சி உருவாக்கிய போராட்டங்களின் அடிநாதமாக விளங்கியது. தாழ்த்தப்பட்ட மக்கள் வெகுஜனப் போராட்டப்பாதையில் அணிதிரண்டு முன்சென்றனர். அவர்களது அப்போராட்டத்திற்கு மாக்சிச லெனினிசக் கட்சி தலைமைத்தாங்கி வழிகாட்டியது.

சாதியமும் தீண்டாமையும் நிலவுடைமை வழிவந்த முரண்பாடும் ஒடுக்குமுறையாகும். இதற்கு எதிரான போராட்டம் என்பது இலங்கை முழுவதிலும் ஓர் அதிர்வை ஏற்படுத்தியது. சமாதானப் பாதையில் அகிம்சை வழிமுறைகளில் வெற்றிபெறாத சாதியத்திற்கு எதிரான போராட்ட முயற்சிகள் இறுதியில் புரட்சிகரமான ஆயுதப்போராட்டம் என்ற கட்டத்தை அடைந்தே வெற்றியும் பெற்றுக்கொண்டன. அதில் வர்க்கப்போராட்ட அடிப்படையும் தொழிலாளி விவசாயிகளின் போராட்ட அணிதிரள்வும் பிரதானப் பங்கை வகித்தன. அதற்கு புரட்சிகர மாக்சிச லெனினிசக் கட்சி தலைமை கொடுத்தது. குறித்த இலக்கை நோக்கி மக்கள் வெகுஜன அடிப்படையில் அணிதிரட்டப்பட்டனர். மக்கள் மீது எவ்வித அரசியல் அல்லது ஆயுத மிரட்டல்களோ விடுக்கப்படவில்லை. அதே மக்கள் மத்தியில் கட்சியின் இளைஞர் இயக்கம் அரசியல் கருத்துக்களை பரப்புரை செய்து அமைப்பு வாயிலான அணிதிரட்டல்களை செய்திருந்தது. அதனால் வெகுஜன எழுச்சியில் ஈடுபட்ட மக்களுக்கு அரசியல் போராட்ட நடைமுறை மீதான நம்பிக்கையானது இயல்பாகவே ஏற்பட்டிருந்தது.

## புரட்சிகர எழுச்சியின் 45 வது ஆண்டு நினைவாக

இவை யாவற்றுடனும் கட்சியின் வழிகாட்டலானது சாதியத்தாலும் தீண்டாமையாலும் மறுக்கப்பட்ட ஜனநாயகம், சுதந்திரம், சமத்துவம் மற்றும் மனித உரிமை என்பவற்றை வென்றெடுக்கும் அடிப்படை [illegible] கொண்டிருந்தது. இவற்றுக்கான கொள்கை வகுப்பில் அதிதீவிர நிலைப்பாடோ அன்றி குறுகிய சாதியவாத கண்ணோட்டமோ அறவே பின்பற்றப்படவில்லை. மாக்சிசம், லெனினிசம் மற்றும் மா ஓ சேதுங் சிந்தனை அடிப்படையிலான வர்க்க அரசியலே அடிநாதமாக விளங்கி நின்றது. மேலும் ஒக்ரோபர் எழுச்சித்துப் பின் எழுந்த போராட்டங்களில் மக்களே கதாநாயகர்களாக விளங்கினர். தனிப் பெரும் தலைவர்கள் என்ற நிலவுடைமை சிந்தனை வழிவந்த போக்குகள் இருக்கவில்லை. கூட்டுத்தலைமையாக செயற்பட்ட அதேவேளை தலைமைப்பாத்திரம் வகித்த தோழர்களின் ஆற்றல்கள் இப்போராட்டங்களில் வெளிப்பட்டன. அத்தகைய தலைவர்கள் எனப்பட்டோர் தன் அடக்கத்துடன் மக்களுக்கு சேவை செய்பவர்களாகவே செயற்பட்


1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21 ஊர்வலம்

டனர். மக்கள் தாராளமாக நிதியுதவி செய்துவந்தனர். சில தனிநபர்கள் உதவினர். சில குறிப்பான தோழர்கள் உதவினர், இவர்கள் எவருமே இப்போராட்டத்தில் பிரதியுபகாரம் எதிர்பார்க்காதவர்களாகச் செயற்பட்டனர்.

சைவ சித்தாந்தமும், கந்தபுராண கலாச்சாரமும், வேரூன்றி இருந்த யாழ்ப்பாண நிலவுடைமைச் சூழலில் சாதியமும் தீண்டாமையும் செழிப்பாக இருந்து வந்தது. இதனை எந்தத் தமிழ்த் தேசியவாத அரசியலும் அதன் தலைமைகளும் கேள்விக்கு உட்படுத்தவில்லை. எனவே அதனை எதிர்த்து முறியடிக்கும் பாரிய வரலாற்றுப் பணியினை மார்க்சிச லெனினிச வாதிகளே கையேற்று முன்னெடுத்தனர். அத்தகைய எழுச்சியும் போராட்டமும் இடம்பெற்ற 45வது ஆண்டு நினைவினை முன்னிறுத்தும் போது அதில் தியாகியான தோழர்கள், நண்பர்கள், மக்களை நினைவு கூர்ந்துக் கொள்வது அவசியமாகும். அப்போராட்டங்களில் முன்னிலை வகித்து காலத்தால் இயற்கையெய்திய அனைத்து தோழர்கள், நண்பர்களையும் இவ்வேளை நினைவு கூறுகின்றோம். இன்னும் தமது முதுமைக்காலத்தில் உறுதியான உணர்வும், உத்வேகமும் குலையாது இருந்து வரும் தோழர்கள், நண்பர்கள், மக்களை கௌரவித்து வாழ்த்துகின்றோம். புதிய தலைமுறை அந்த உன்னதமான எழுச்சி போராட்டத்தின் அனுபவங்களை பகிர்ந்து தமது புரட்சிகர பயணத்தை தொடரவேண்டும் என வேண்டுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை 14

-வெகுஜனன்-

தமிழ் ஈழக் கோரிக்கையை வென்றெடுக்க ஆயுதம் ஏந்தி நின்ற தமிழ் இளைஞர் இயக்கங்கள் ஒவ்வொன்றினதும் சுயரூபங்கள் 90களில் தமிழ் மக்களின் நடுவே அம்பலமாகின. புலிகள் இயக்கத்தைத் தவிர்ந்த பெரும்பாலான இயக்கங்கள் இந்தியாவின் கருவிகளாகச் செயற்பட்ட நிலை தெளிவாகியது. அதே வேளை, புலிகள் இயக்கம் தன்னைத் தனியொரு ஆதிக்க இயக்கமாக்கிக் கொள்வதில் முனைப்புக் காட்டிக் கொண்டது. அதற்காக ஏனைய இயக்கங்களையும் தமிழர் தரப்புக் கட்சிகளையும் மாற்றுக் கருத்துடைய அரசியற் சக்திகளையும் வேட்டையாடுவதில் எவ்வித தயவுதாட்சணியத்தையும் காட்டவில்லை. மேலும் தனது இயக்கத்திற்குள்ளும் பிரபாகரனின் தலைமைக்கு எதிராகச் செயற்பட்ட எவரையும் விட்டு வைக்கவும் இல்லை. புலிகள் இயக்கத்தினுள் மாற்றுக் கருத்தை முன்வைக்கவோ அன்றி ஜனநாயக கலந்துரையாடல்களுக்கோ இடமளிக்கவில்லை. அந்த இயக்கம் எதிராளிகளை எவ்வாறு தாது தேர்ச்சி பெற்ற புலனாய்வு மூலம் அடையாளம் கண்டு அழிப்பதில் முன்னின்றதோ அதுபோன்றே தங்கள் மத்தியில் உள்ள களப் போராளிகளையும் தலைவர்களையும் கடுமையான கண்காணிப்புக்கும் புலனாய்விற்கும் உட்படுத்தி வந்தது. இதில் அதிமுக்கியமானது, பிரபாகரன் என்ற தனிமனித தலைமைத்துவத்திற்கு எதிராக செயற்படுவோரை அடையாளம் கண்டு அழிப்பதாகவே அமைந்திருந்தது.

அந்த வகையிற், பிரபாகரனுக்கு அடுத்த நிலையில் வன்னிப் பிரதேசத்துக்குப் பொறுப்பாக இருந்து வந்த மாத்தையா 1993ல் பிரபாகரனின் வழிகாட்டலிற் கைதுசெய்யப்பட்டுப் புலிகளின் சிறையில் அடைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சுமார் ஒரு வருட விசாரணைக்கும் சித்திரவதைகளுக்கும் பின்பு மாத்தையாவிற்கு 1994ல் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. இதனைப் புலிகள் இயக்கம் உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கவில்லையாயினும் பின் வந்த மாதங்களில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் மூலம் இது வெளிவந்தது. இவ் விடயத்தில் மாத்தையா மட்டுமன்றி அவருக்கு ஆதரவாக இருந்த பலரும் கைதுசெய்யப்பட்டுக் கொல்லப்பட்டதுடன் சிலர் நீண்ட சிறைவைப்புக்கும் ஆளாக்கப்பட்டனர். இந்த உள்ளி பக்க அழிப்பு நடவடிக்கையில் பரவலாகச் சுமார் 300 போராளிகள் வரை கொல்லப்பட்டு அழித்தொழிக்கப்பட்டதாகப் பின் வந்த தகவல்கள் தெரிவித்தன. இவர்கள் இந்திய உளவாளிகள் எனத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டுக் கொல்லப்பட்டனர். இது புலிகள் இயக்கத்திற்கு கைவந்த கலையாகவும் இருந்தது. இதே கலையைப் பயன்படுத்தி மாத்தையாவும் அவரோடு இருந்தவர்களும் முன்பு எத்தனைப் பேரைப் பலி கொண்டனர் என்பது முரண்நகையானதாகும். இதே போன்று பிரபாகரனின் நம்பிக்கைக்குரிய மற்றொரு தளபதியான கிட்டு என்பவர் 1993 ஜனவரியில் தனது ஒன்பது சகபோராளிகளுடன் ஐரோப்பாவில் இருந்து கடல் மார்க்கமாக இலங்கைக்குத் திரும்பிக் கொண்டிருந்த நேரத்தில் இந்தியக் கடற்படையால் வழி மறிக்கப்பட்டுச் சரணடையும்படி கேட்கப்பட்டனர். அதற்கு மறுப்புத் தெரிவித்த அவர்கள், தமது கப்பலுக்கு வெடிவைத்துத் தற்கொலை செய்து கொண்டனர். கிட்டு தமது எதிராளிகளைக் கொல்லுவதில் ஈவிரக்கமற்ற ஒருவர். அவரும் கப்பலில் கருகிமாண்டார்.

புலிகள் இயக்கம் தன்னையொரு சக்திமிக்க இராணுவ இயக்கமாக்குவதில் விரைந்து செயற்பட்டதுடன் தனது பொருளாதார வலிமையை வளப்படுத்துவதில் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் முனைப்புக் காட்டியது. அவர்கள் பின்பற்றிய இந்திய விரோதமும், சுயசார்பு நிலை என்ற பரப்புரைகளும் தமிழ் மக்கள் மத்தியில் விட்டுக் கொடுக்காத உறுதியான இயக்கம் என்னும் ஒரு வகைத் தோற்றப்பாட்டைக் காட்டின. அத்தகைய நிலைப்பாடு புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் வளர்ந்ததையொட்டி, அவர்களைப் பணம் பறிக்கும் மரங்களாகப் பயன்படுத்துவதில் புலிகள் இயக்கம் முன்னின்றது. அதே வேளை புலிகள் இயக்கத் தலைமையானது அமெரிக்க மேற்குலக சார்பை உள்ளூரக் கொண்டிருந்தும் ஒன்றாகவும் காணப்பட்டது. ஆனால் அதனை அப்பியக்கம் வெளிப்படையாக ஒருபோதும் காட்டிக் கொள்ளவில்லை. இருப்பினும் முக்கிய சர்வதேச நிகழ்வுகளில் புலிகள் இறுகிய மௌனத்தைக் கடைப்பிடித்ததன் மூலம் தமது உள்ளார்ந்த ஏகாதிபத்திய சார்பு நிலையை வெளிப்படுத்தினர்.

இந் நிலையில் தெற்கில் அரசியல் நிலைமைகள் மேலும் மோசமடைந்து வந்தன. ஐக்கிய தேசியக் கட்சியின் தொடர் ஆட்சி தோல்விகளின் நடுக்கத்துடனை நீடித்தது. நிறைவேற்று ஜனாதிபதியாக ஆர். பிரேமதாசவின் வரவும் ஜே.வி.பியின் மீதான (1988-89) கொடூரத் தாக்குதலும் அவ்வியக்கத்தை மட்டுமன்றிச் சாதாரண இளைஞர் யுவதிகள் பொதுமக்கள் எனப் பலரையும் கடுமையாகப் பாதித்தது. அரச இயந்திரமான பொலிசும் ஆயுதப் படைகளும் தமது அப்பட்டமான ஒடுக்குமுறைகளை உக்கிரப்படுத்திய அதே வேளை ஜே.வி.பியும் தமக்கு எதிரானவர்களைக் கொல்வதில் முன்னின்றது.

அவர்களது தனிநபர் அழிப்பில் ஜனநாயக இடதுசாரி தொழிற்சங்கவாதிகள் பலர் கொல்லப்பட்டனர். இப் பயங்கர நிலை ஜே.வி.பியின் அழிப்போடும் விஜேவீராவினதும் ஏனைய தலைவர்களதும் குரூரமான கொலையோடும் முடிவு நாடகமாக்கி வந்தது. அதேவேளை ஜனாதிபதி பிரேமதாச தனது எதிர்களை அழித்தொழிக்கும் கொள்கையை முன்னெடுத்தார் என்பதை முன்னர் பார்த்தோம். ஜே.வி.பி. அழிப்பின் போது தெற்கில் சுமார் அறுபதினாயிரம் பேர் வரை கொல்லப்படவும் காணாமல் போகவும் செய்யப்பட்டனர். பிரேமதாசவுக்கும் புலிகளுக்கும்







மிடையிலான பேச்சுவார்த்தை ஒரு கட்டத்தில் முறிவடைந்த பின்னர் ஜனாதிபதி பிரேமதாச புலிகள் இயக்கத்தால் 1993ம் ஆண்டு மேதின ஊர்வலத்தில் வைத்துக் கொல்லப்பட்டார். அன்று பிரதமராக இருந்த டி.பி. விஜேதுங்க அரசியலமைப்பின் வழியாக ஜனாதிபதியாகப் பதவியேற்றார். அடுத்து வரவிருந்த ஜனாதிபதி தேர்தலுக்கு ஒன்றரை வருடகால இடைவெளி இருந்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் தொடரான இருண்ட ஆட்சிக்கு எதிரான வறுமையான எதிர்ப் பிரசாரத்தை மேற்கொள்வதற்கு எதிரணிக் கட்சிகளுக்கு இக் காலம் ஒரு வாய்ப்பாக அமைந்து கொண்டது.

சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான சிறீ லங்கா சுதந்திரக் கட்சியும், சந்திரிகா தலைமையிலான மக்கள் கட்சியும் ஏனைய பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகளும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான தீவிரப் பிரசாரத்தில் மேலும் முன்சென்றன. அதற்கான சூழலை ஐக்கிய தேசியக் கட்சியின் தொடர்ச்சியான பாசிச ஆட்சியானது முன்னெடுத்து வந்தது. அவசரகாலச் சட்டமும் பயங்கரவாதத் தடைச் சட்டமும் நாடு முழுவதும் கோலோச்சி வந்தது. அதனால் அரச பயங்கரவாதம் தலைவிரித்தாடி மக்களை கொடிய அடக்குமுறைகளுக்கு ஆளாக்கியது. வடக்கில் பிரிவினைவாதப் பயங்கரவாதத் தையும் தெற்கில் ஜே.வி.பியின் தீவிரவாதத்தையும் அடக்குவதாகக் கூறியே ஐக்கிய தேசியக் கட்சியின் கீழான அரச இயந்திரம் தனது பாசிச ஒடுக்குமுறைகளை நடாத்தி வந்தது.

இத்தகையச் சூழலில் 1994ல் தென் மாகாணத்திற்கும் மேல் மாகாணத்திற்குமான மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெற்றன. பொதுசன ஐக்கிய முன்னணி சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் பெருவெற்றியை பெற்றது. சந்திரிகா குமாரதுங்க மேல் மாகாண முதலமைச்சராகவும், பின்னர் பாராளுமன்றத் தேர்தலின் பின் பிரதமராகவும் அதனைத் தொடர்ந்து ஜனாதிபதியாகவும் தெரிவானார். அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் பதினேழு வருடகால இருண்ட ஆட்சிக்கு முடிவு கட்டிய பொதுசன முன்னணிக்குத் தலைமை தாங்கினார். தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் கொண்டுவருவதாகவும் யுத்தத்திற்கு முடிவு ஏற்படுத்துவதாகவும், மோசமடைந்து வந்த பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதாகவும் மக்களுக்கு வாக்குறுதிகள் வழங்கினார். மனித உரிமைகளும் ஜனநாயகமும் பாதுகாக்கப்படுமெனச் சூளுரைத்தார். எதிர்க் கட்சியில் இருந்தபோதே பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியிருந்த பொதுசன ஐக்கிய முன்னணியின் சந்திரிகாவும் தாராளமாக வாக்குறுதிகளை வழங்கினார். மக்களும் வழமை போன்றே மாறிப் புள்ளடியிட்டு விரைவாகவே ஏமாற்றங்களையும் புதிய அடக்குமுறைகளையும் எதிர்கொண்டனர். ஜனாதிபதித் தேர்தலில் 1994ல் சந்திரிகா அம்மையார் 62 சதவீத வாக்குகள் பெற்று அமோக வெற்றி பெற்றார். ஆனால் அந்த வெற்றிக்குக் காரணமாக இருந்த மக்கள் எதிர்நோக்கிய எந்தவொரு அரசியல் பொருளாதாரப் பிரச்சினையும் அவரது முதல் தடவையிலும் சரி இரண்டாவது தடவையிலும் சரி தீர்க்கப்படவே இல்லை. குறிப்பாகத் தமிழ் மக்கள் சந்திரிக்காவிடம் இருந்து எதிர்பார்த்த இனப் பிரச்சினைக்கான தீர்வு முழுமையாகவோ அன்றிப் பகுதியாகவோ தரப்படவில்லை. இருப்பினும் சந்திரிகா அம்மையார் தேசிய இனப் பிரச்சினைக்கான முன்முயற்சிகளை தனது நம்பிக்கைக்குரிய உயர் வர்க்க தமிழ் புத்திஜீவிகளின் ஒத்துழைப்புடன் முன்னெடுத்தார். ஆயினும் அவருக்குப் பக்கத்தில் இருந்த பேரினவாதிகளும் எதிர்ப்புறத்தில் இருந்த ஐக்கிய தேசிய கட்சியினரும் அவரது தீர்வுத் திட்டம் வெளிவர முன்பே குழப்பியடிக்க முயற்சி செய்தனர். மறுபுறம் தீவிர நிலையில் நின்று அவர்களுக்கு உதவுவது போன்று தமிழ் விடுதலைப் புலிகள் இயக்கமும் தனது வழமையான ஏமாற்றுத்தனங்கள் மூலம் தமது இருப்பிற்கு வழிதேடும் கைங்கரியங்களில் இறங்கிக் கொண்டது.

சந்திரிகாவால் முன்மொழியப்பட்ட தேசிய இனப் பிரச்சினைத் தீர்வுத் திட்டத்தைப் பாராளுமன்றத்திற்கு உள்ளும் புறமும் ஐக்கிய தேசியக் கட்சி எதிர்த்தது. 2001ம் ஆண்டு, தீர்வுத் திட்ட யோசனைகளைப் பாராளுமன்றத்தில் வைத்தபோது ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் தீயிட்டுக் கொளுத்தினர். தற்போது தமிழ் மக்களின் காவலன் வேடமிட்டுத் தோற்றம் காட்டும் ரணில் விக்கிரமசிங்க அன்று பாராளுமன்றத்திலே அதைச் சிரித்தவாறு பார்த்திருந்தார். அத்தகைய மனிதர் தான் இன்று தமிழ் மக்களுக்கு தீர்வு வேண்டுமென அடிக்கடி அறிக்கை விட்டுக் குரல் கொடுத்தும் வருகிறார்.

அவ்வாறே புலிகள் இயக்கமும் காலத்தைக் கடத்தித் தம்மைப் பலப்படுத்தும் பல நிலை முயற்சிகளை முன்னெடுத்தது. அவர்களது பேச்சுவார்த்தையிலான காய் நகர்த்தும் தந்திரோபாயமானது உள்ளொன்று வைத்து புறமொன்று பேசி தம்மைப் பலப்படுத்தி அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கைக்குச் செல்வதாகவே இருந்தது. அதற்கான பரப்புரைப் பரப்புகளையும் செய்துகொண்டனர். அதே போன்று, ஆட்சி செய்துவந்த பேரினவாத முதலாளித்துவ அரசாங்கங்களும் அதன் தலைமைகளும் தமிழ்த் தலைமைகளை அவ்வப்போது ஏமாற்றி உரிய அடிப்படைகளில் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்காது தட்டிக் கழித்தே வந்துள்ளனர். இவ்விரு தரப்புக்களதும் நிலைப்பாடுகளிலும் மக்களின் அவரவரது வர்க்க நலன்களும் இருப்புகளும் ஆதிக்க அரசியல் போக்குகளும் பாதுகாக்கப்பட்டுவந்த அதேவேளை, இரு தரப்பு உழைக்கும் மக்களும் பாதிப்புகளையே பெற்று வந்தனர்.

ஜனாதிபதி சந்திரிகாவினால் முன்வைக்கப்பட்ட தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வுப் பொதியானது, அதில் ஆரம்பத்தில் இருந்த உள்ளடக்க அம்சங்கள் திரும்ப திரும்ப வெட்டிக் கொத்திக் குறைக்கப்பட்டதால், இறுதியில் அர்த்தமற்ற வெறும் பொதியாகி விட்டது. அதே வேளை, புலிகள் இயக்கம் சிறிய கால இடைவெளிக்கு பின் தனது தாக்குதல்களை மேற்கொள்ள ஆரம்பித்தது. அவ் வேளை சந்திரிகா தனது மாமனாரும் முன்னாள் இராணுவ அதிகாரியுமான அனுருத்த ரத்வத்தையை பாதுகாப்பு அமைச்சராகவும் ஆக்கிக்கொண்டார். அவர், தனது இராணுவ கண்ணோட்டத்தில், புலிகளைப் பலமிழக்கச் செய்யமுடியுமென நம்பினார். அதற்கான இராணுவ வியூகங்களை உயர் இராணுவ அதிகாரிகளுடன் இணைந்து வகுக்கலானார். மீண்டும் யுத்தம் தனது கோர முகத்தை வெளிக்காட்டியது. அந்த யுத்தத்திற்கு கொடுக்கப்பட்ட விளக்கம் "சமாதானத்திற்கான யுத்தம்" என்பதாகும்.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி யுத்தத்தை முன்னெடுத்த அதே வேளை புலிகள் போராடுவதற்கான அழைப்பை விடுத்து, அதனை மூன்றாவது ஈழப்போர் என அழைத்தனர். திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் தரித்து நின்ற கடற்படைக் கப்பலொன்றை வெடிவைத்து தகர்த்ததன் மூலம் அதற்கான முதல் தாக்குதலைத் தொடுத்தனர். அரசாங்கத் தரப்பிலும் புலிகள் இயக்கத் தரப்பிலும் ஒருவரை யொருவர் ஏமாற்றியவாறு தத்தம் இராணுவ நிலைகளையும் அவற்றின் பலத்தையும் பெருக்குவதையே அடிப்படை நோக்காகக் கொண்டிருந்தனர். இராணுவம் வடக்கிலும் கிழக்கிலும் அவ்வப்போது பல மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ முன் நகர்வுகளை முன்னெடுத்தது. அவற்றை எதிர்கொள்வதில் புலிகள் இயக்கம் தனது இராணுவ உத்திகளையும் பலத்தையும் வெளிக்காட்டி வந்தது.

அடுத்த இதழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத் தொழிற்சங்கங்களின் சீரழிவும் மாற்றுத் தொழிற்சங்கத்தின் தேவையும்

-மாக்ஸ் பிரபாஹரர்-

மலையகத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் இன, மொழி, கலை, கலாசார, பண்பாட்டியல் கூறுகள் போன்றே தொழிற்சங்கச் செயற்பாடும் அவர்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்த, இன்றியமையாத ஒன்றாய் இருந்து வருகிறது. அவ்வப்போது ஏறி வருகிற விலைவாசிகளை ஜீரணித்துக்கொள்ள முடியாது. அன்றாடத் தேவைகளுக்காய வாங்கும் அத்தியாவசிய (அரிசி, மா, பருப்பு, சீனி மற்றும் இதர) பொருட்களின் அளவுகளை குறைத்துக் கொண்டாலும் தொழிற்சங்கத்துக்கான சந்தாப் பணத்தை மட்டும் சதமேனும் குறையாது செலுத்திவிடுவது அவர்களின் தொழிற்சங்கஞ்சார் ஈடுபாட்டையும் விசுவாசத்தையும் வெளிக்காட்டுகிறது. இதற்கான காரணம் எல்லாவெளியில் தொழிற்சங்கம் என்பது இல்லாவிடில் தமக்குக் கிடைக்க வேண்டிய அனைத்து உரிமைகளும் கிடைக்காமல் போய்விடும் என்றதொரு நம்பிக்கையாகும். ஆனால் இவர்களுக்குக் கிடைக்கவேண்டிய ஏராளமான உரிமைகளைப் பெற்றுக் கொடுக்காது மிகவும் நுட்பமாக அவற்றை மறைத்துத் தமது தரகுக் கூலியைப் பெற்றுக்கொண்டு நிகழ்த்தப்பட்ட காட்டிக்கொடுப்புகள் அவர்கள் அறியாதவை.

**தொழிற்சங்கங்களின் நிலை**

சமகாலத்தில் மலையகத்தில் மட்டும் ஏறக்குறைய நாற்பது தொழிற்சங்கங்கள் இயங்குவதாக அறிகிறோம். இருந்த போதிலும் அனைவரையுமே தொழிற்சங்கத்தின் ஆரம்ப நோக்கங்களையும் கொள்கைகளையும் புறக்கணித்துவிட்டுத் தாக்கேயுரிய முதலாளித்துவ குணாம்சங்களை கட்டிக்காத்து வருமானம் ஈட்டும் நிறுவனங்களாக மாற்றம் பெற்றுள்ளன. இந்தச் சாதகமான நிலைமையை நன்கு விளங்கிக்கொண்ட தோட்ட உரிமையாளர்கள் சம்மேளனம் இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு அன்றாட வேதனத்தைக் கூட்டிக்கொடுத்து இலாபத்தை இழப்பதைவிட சம்பள ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுகின்ற குறிப்பிட்ட சில தொழிற்சங்கத் தலைமைகளுடன் சேர்ந்து இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை தமக்கு ஏற்புடைய தொகையொன்றைக் கொடுப்பதன் மூலம் சம்பளப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருகிறது. இது தவிரக் குறித்த தொழிற்சங்கத் தலைமைகளுக்குத் தாம் விரும்பிய வகையிலான 'சந்தோசங்களையும்' (அதாவது இலஞ்சத்தையும்) பெற்றுக் கொடுக்கிறது. இந்த அநியாயங்கள் போதாதென்று, தொழிற்சங்கங்கள் போராட்டங்களை முன்னெடுக்க முடியாதென்ற சட்டத்தை மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கமும் அமுல்படுத்தி வருகிறது.

தொழிலாளர் என்போர் எல்லாக் காலத்திலும் இந்த நாட்டின் வருமானத்தை தீர்மானிக்கின்ற சக்தியாக இருந்து வந்திருக்கின்றனர் என்பது எவராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மையாகும். ஆகக்குறைந்தது இந்த உழைக்கும் வர்க்கத்தினருக்கு உட்கட்டமைப்பு வசதிகளை செய்துகொடுப்பதன் மூலம் அவர்களின் இருப்பையும் தொடர்ச்சியான உழைப்பையும் பெற்றுக்கொள்ள இயலுமானதாக இருக்கும் என்ற அறிவு கூட இவர்களின் உழைப்பை உறிஞ்சி உடம்பு வளர்த்து கொழுத்துக்கிடக்கும் முதலாளித்துவ முதலைகளுக்கு விளங்குவதில்லை. இந்த வேளையில் தான் மலையகத் தொழிலாளர்களின் நலனுக்காக தொழிற்சங்கமொன்றைத் தொடக்கி உண்மையாகவே அவர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்த கோ. நடேசய்யரை நினைவுகொள்ள வேண்டியிருக்கிறது.

**ஆரம்ப தொழிற்சங்க முன்னோடி**

முதன் முதலாக தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான முயற்சிகளைக் கோ. நடேசய்யரே மேற்கொண்டதாக அறிகிறோம். 1931ம் ஆண்டு தொழிற்சங்க செயற்பாடுகளை முன்னெடுத்த அவர் தோட்ட உரிமையாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் பாரிய தலையிடியாயிருந்தார். அதுவரை தொழிலாளர்களுக்கான வேதனத்தைக்கூட ஒழுங்காக வழங்காத தோட்ட உரிமையாளர்கள் நடேசய்யரின் தொழிலாளர் நலன்சார் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதன் பின்னர் தொழிலாளர்களின் சில முக்கிய தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டிய கட்டுப்பாட்டுக்குள் தள்ளப்பட்டனர். தொழிலாளர்களைச் சுரண்டியும் ஏமாற்றியும் இலாபமீட்டிய முதலாளிகளுக்கும் தோட்ட உரிமையாளர்களும் இது மிகவும் கஷ்டமாக இருந்தது. தங்களின் முதலாளிய தர்மம் சிதைந்து போவதை விரும்பாத அவர்கள் நடேசய்யருக்கும் தொழிலாளர்களுக்குமிடையே முரண்பாட்டை ஏற்படுத்தி அவரை தொழிலாளர்களிடமிருந்து பிரிக்கும் சதிச் செயற்பாடுகளை மேற்கொண்டனர்.

நடேசய்யர் ஒரு பிராமணர், தொழிலாளர் வர்க்கத்தைச் சாராதவர், தன்னைத்தானே தலைவராக அறிவித்துக் கொண்டவர், தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கு மிடையே இருக்கின்ற உறவினைச் சீர்குலைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவர் என்றெல்லாம் தோட்ட நிர்வாகம் குற்றஞ் சுமத்தியது. இவ்வாறு தன்மீது சுமத்தப்பட்ட அனைத்து அவதூறுகளுக்கும் முகங்கொடுத்த நடேசய்யர் தன் நோக்கத்திலிருந்தும், கொள்கையிலிருந்தும் கிஞ்சித்தும் விலகாது விடாப்பிடியாக இருந்தார்.

மலையகத் தொழிற்சங்க வரலாற்றில் நடேசய்யரால் தொடங்கப்பட்ட அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் செயற்பாடுகள் குறிப்பிடத் தக்கவை. விசேடமாக மதுப் பழக்கம், சூதாட்டம், கடன்படல் போன்ற செயல்களில் தொழிலாளர்கள் ஈடுபடுவதைத் தடுத்தலும் மறுபுறத்தில் சிக்கனம், சுயசேமிப்பு, சகோதரத்துவம் ஆகியவற்றை ஊக்குவித்தலும் போன்ற ஆரோக்கியமான செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் தொழிலாளர்களை விழிப்படையச் செய்வதையே அச் சங்கம் தனது பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தது.

பேச்சாற்றலும் ஆங்கிலப் புலமையும் கொண்டிருந்த நடேசய்யர் மிகவும் சக்திவாய்ந்த தோட்ட உரிமையாளர்களுக்குப் பல வழிகளிலும் சவாலாக விளங்கியவராவார். தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான தோட்ட உரிமையாளர்களின் அராஜகங்களை எதிர்த்துக் குரல் கொடுக்கின்ற தைரியத்தை அன்று தொழிலாளர்கள் கொண்டிருக்கவில்லை. ஆனால் தொழிலாளர் வர்க்கத்தைச் சாராத அவர் தோட்ட உரிமையாளர்களின் தொழிலாளர் விரோத செயற்பாடுகளை எதிர்த்து நின்றார்.



அந்த வரலாற்றின் தொடர்ச்சியாக மலையகத்தில் இயக்கமுற்ற போர்க்குணங்கொண்ட இடதுசாரித் தொழிற்சங்கங்களின் பங்களிப்புகளைக் குறைத்து மதிப்பிட முடியாது. குறிப்பாக லங்கா சமசமாஜக் கட்சியின் லங்கா தோட்ட தொழிலாளர் சங்கம், செங்கொடிச் சங்கம், வெள்ளையனின் தலைமையிலிருந்த தேசிய தொழிலாளர் சங்கம் போன்றன குறிப்பிடத்தக்க வகையில் தொழிலாளர் நலனில் அக்கறை காட்டிய அமைப்புகளாக ஒரு காலத்தில் இருந்து வந்தன.

**இலங்கை இந்திய காங்கிரஸ்**

1939ம் ஆண்டு நேருவின் இலங்கை வருகையோடு இலங்கை இந்திய காங்கிரஸ் தொடக்கப்பட்ட போதிலும் அத் தொழிற்சங்கம் தொழிலாளர் சங்கத்துவம் பற்றிய ஆழமான சிந்தனையைக் கொண்டிருக்கவில்லை. 1956ம் ஆண்டு இலங்கை இந்திய காங்கிரஸ் முறையே தொண்டமான், அஸீஸ் ஆகியோரின் தலைமைகளின் கீழ் இரண்டாக உடைந்தது. இந்த முறுகலோடுதான், அரசியல் இலாபங் கருதித் தொழிற்சங்கம் ஒன்று இயங்கத் தொடங்கிய காலமும் இதுவே. அன்று தொடங்கி இன்று வரை, மலையகத் தொழிற்சங்க வரலாற்றில் முதலாளித்துவ நலன் சார்ந்த, மிகவும் பிற்போக்கான, நேர்மையான தொழிற்சங்கப் போராட்டங்களைக் காட்டிக்கொடுக்கின்ற ஒரு தொழிற்சங்கமாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைக் குறிப்பிடலாம்.

பின் வந்த காலங்களில் கருத்து முரண்பாடுகள் காரணமாக இ.தொ.கா.விலிருந்து அவ்வப்போது சில முக்கிய உறுப்பினர்கள் வெளியேறித் தங்கள் பங்குக்குத் தொழிற்சங்கங்களைத் தொடங்கி இந்த உழைக்கும் வர்க்கத்தை ஏமாற்றும் நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றனர். ஆரம்ப காலத்தில் தொழிலாளர் நலன்களை முன்னிலைப்படுத்தி இயங்கிய தொழிற்சங்கங்களோடு இன்றைய தொழிற்சங்கங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது முற்று முழுதாக அதன் எதிர்ப்பக்கத்திலேயே அவை இருக்கின்றன என்பதில் [illegible] காரணம், தொழிலாளர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தாது அவர்களைத் தொழிற்சங்க ரீதியாகப் பிரிக்கும் தந்திரங்களைக் கையாளுதல், தொழிலாளர்களை ஏமாற்றுதல், உழைக்கும் வர்க்க ஒற்றுமையைக் குலைத்தல், மதுப் பழக்கத்தை ஊக்குவித்தல் என்பவையாகும். மேலாக, ஆளும் வர்க்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கமைய மலையகத் தொழிலாளர்களின் இருப்பையும் பண்பாட்டையும் சிதைக்கின்ற முகவர் அமைப்புக்களாகவும் அவை செயற்படுகின்றன. குறிப்பாகத் தேர்தல் காலங்களில் தனித்துவம் என்று கூறிக்கொண்டு மண் காக்க வரும் மைந்தர்களாக இருக்கட்டும், புதுயுகம் படைக்கவென்று புறப்பட்ட இளைய தலைவர்களாக இருக்கட்டும், [illegible] இளைய தளபதிகளாக இருக்கட்டும்— யாவருமே சாராயமென்ற சரக்கைத் தோட்டங்களுக்குள் இறக்கித்தான் வாக்குகளைப் பறித்தார்கள். அந்த வகையில் எல்லோருமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்ற கருத்து இவர்களுக்கு நூற்றுக்கு நூறு பொருந்தும்.

**தொழிலாளர்களும் புதிய தொழிற்சங்கமும்**

இலங்கையில் பெருந்தோட்டங்களின் வளர்ச்சியில் தொழிலாளர்களின் பங்கு இன்றியமையாத ஒன்றாகும். எண்ணிக்கையில் பெரும்பான்மையாக இருக்கின்ற இவர்கள் அதிகாரச் சுரண்டலுக்கு ஆளாவது தொழிற்சங்கத் தலைமைகள் என்று சொல்லிக் கொள்கின்ற ஆளும் வர்க்க அடிவருடிகளாலேயே. ஆயின், தொழிலாளர் வர்க்கத்தின் புதிய தலைமுறை இவ்வாறான கண்ணாமூச்சிக் கதைகளுக்கெல்லாம் காதுகொடுக்காது பிழைக்கும் வழியைத் தேட வேண்டும் என்பது காலத்தின் தேவையாக இருக்கிறது.

தொழிற்சங்கம் என்பது என்ன? அதன் கடமைகள் யாவை? தொழிற்சங்கம் என்பது முதலாளிகளின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காகத் தொடங்கப்படுவதல்ல. அது தொழிலாளர்களின் நலனுக்காகத் தொடக்கப்படும் ஓர் தொழிலாளர் அமைப்பாகும். அடிப்படையில், தொழிலாளர்களின் நலன்களை முன்னெடுக்கின்ற ஓர் அமைப்பாகவும் தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு தொழிலாளர்களை ஒன்றிணைக்கின்ற அமைப்பாகவும் அது இருக்க வேண்டியது அவசியம்.

காலத்திற்கு காலம் இப்படியெல்லாம் கதை சொல்லிக்கொண்டு தொடக்கப்பட்ட எத்தனையோ புதிய தொழிற்சங்கங்கள், சிறுகால நகர்வில் தம்மையும் தாம் முன்னெடுக்க முனைந்த அமைப்பின் கொள்கைகளையும் மறந்து பழமையான பிற்போக்கு நடவடிக்கைகளில் ஈடுபட்ட வரலாறுகளை நாம் மறந்துவிடக்கூடாது. அதற்கு அந்த அமைப்பின் முக்கியஸ்தர்கள் கூறும் கதைகள் வேடிக்கையானவை. அதாவது, தாம் மக்களை ஏமாற்றாது நேர்மையாகச் செயற்படுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டபோதும் மக்கள் தம்மை அடையாளம் கண்டு கொள்ளாது ஏனைய ஏமாற்று தொழிற்சங்கங்களில் இணைந்துகொண்டு தம்மைப் பலவீனப்படுத்துவதாகவும் குற்றம் சுமத்துகின்றனர். இந்தக் கூற்றில் எந்தளவு தூரம் உண்மை இருக்கின்றது என்பது தெரிந்தவர்களுக்குத் தெரியும். எனினும் ஒருவரை ஒருவர் குற்றஞ் சுமத்துவதை விடுத்து, எல்லாவிதமான சவால்களையும் எதிர்கொண்டு அந்த உழைக்கும் வர்க்கத்தினரின் நலனுக்காய் இயங்கக்கூடிய ஒரு மாற்றுத் தொழிற்சங்கம் இன்றைய சூழலில் இன்றியமையாததாகிறது. எனவே மாற்றுத் தொழிற்சங்கமொன்று உருவாகிப், பொருளாதாரத்தைத் தீர்மானிப்பதில் தொழிலாளரின் வகிபாகம் என்ன என்பதை உணர்த்தித், தோட்ட உரிமையாளர்களினதும் முதலாளிமார் சம்மேளனத்தினதும் அராஜகங்களை தோற்கடித்து இந்த அப்பாவிக் கூட்டத்தின் விடுதலைக்காய்க் கடுமையாக உழைக்க வேண்டும் என்பது காலத்தின் தேவையாக இருக்கிறது.

**மாற்றுத் தொழிற்சங்கம் கட்டப்பட வேண்டும்**

மாற்றுத் தொழிற்சங்கமொன்று தேவை எனினும், தம் வர்க்க நலன்களை முன்னிலைப்படுத்தி நேர்மையாகச் செயலாற்றக்கூடிய தொழிற்சங்கங்களை அடையாளம் கண்டு அவர்களோடு இணைந்து தமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டிய தேவையும் பொறுப்பும் ஒவ்வொரு தொழிலாளியின் முன்னேயும் இருக்கிறது. சிறு குழுக்களாகப் பிரிவது சிறுசிறு வருமானங்களுக்காகவும் சுயலாபத்திற்காகவும் விலைபோவது போன்ற செயற்பாடுகளை முற்றிலும் தவிர்த்து மாற்றுத் தொழிற்சங்கத்திற்கு ஒத்துழைப்பை நல்குவதே ஒட்டுமொத்த தொழிலாளர் வர்க்கத்திற்கு பெரிதும் நன்மை பயக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு

இமயவரம்பன் 33

1963ம் ஆண்டில் இடதுசாரி ஐக்கிய முன்னணியின் உருவாக்கம் ஏற்படுத்திய புதிய நம்பிக்கை அடுத்த ஆண்டில் நடைபெற்ற சமசமாஜக் கட்சி ஸ்ரீ.ல.சு.க. ஆட்சியில் இணைந்ததோடு தகர்ந்து வீழ்ந்தது. 1965 முதல் 1970 வரையிலான காலம் பாராளுமன்ற இடதுசாரி அரசியலின் தொடர்ச்சியான சீரழிவை அடுத்தடுத்து வெளிப்படுத்திய ஒரு காலமாக இருந்தது.

யூ.என்.பி. அரசாங்கம் மக்கள் மீது சுமைகளை ஏற்றும் என்பது பலரும் எதிர்பார்த்திருந்த விடயமே. இலங்கை நாணயம் 1967ல் 20% மதிப்பிறக்கப்பட்டது. பின்பு மறைமுகமான மதிப்பிறக்கம் ஒன்று (ஏறத்தாழ 40%) உலக வங்கியின் வற்புறுத்தலின் பேரில் 1968ல் மேற்கொள்ளப்பட்டது. ஆளுக்கு 2 கொத்தாக (2 கிலோ அளவில்) இருந்த பங்கீட்டரிசி ஒரு கொத்து குறைக்கப்பட்டு இலவசமாக வழங்கப்பட்டது. விலைவாசிகள் வேகமாக உயர்ந்தன. வேலையின்மையும் அதிகரித்தது. பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்க வேண்டிய அரசாங்கம் முன்னெப்போதும் இல்லாதவாறு மிகப் பெரிய அளவில் உலக வங்கி போன்ற ஏகாதிபத்திய நிறுவனங்களிடம் இருந்து கடன் வாங்கியது. அவை இரு மாக்களும் அமெரிக்க "உதவி"யைப் பெறவும் முன்பே தேசியமயமாக்கப்பட்ட எண்ணெய்க் கம்பனிகளுக்கு யூ.என்.பி. அரசாங்கம் நட்ட ஈடு வழங்கியது. இக்கடனும் அமெரிக்க உதவியும் இலங்கையின் பொருளாதாரத்தை ஏகாதிபத்தியத்துடன் மேலும் இறுக்கமாகப் பிணைத்தன. இவற்றின் பாதகமான விளைவுகளால் ஏற்பட்ட பொருளாதாரச் சுமைகளின் பயனாக 1967ல் தனியார் துறையிலும் 1968ல் அரச துறையிலும் பொது வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன. இலங்கையின் அயல் கொள்கையும், 1956க்கு முன்பு போல, மேற்குலகு சார்பானதாகியது. சோஷலிச நாடுகளுடனான உறவில் சுமுக நிலைப் பேணப்பட்ட போதும், வியற்நாம் போர் போன்ற விடயங்களில் அரசாங்கம் மேற்குலகைச் சார்ந்து நின்றதையும் நாட்டில் அமெரிக்கச் செல்வாக்கை வலுப்படுத்தும் முயற்சியும் வலுப்பட்டதையும் குறிப்பிடலாம்.

எவ்வாறாயினும் தமிழரசுக் கட்சி யூ.என்.பியுடன் இணைந்த போது பாராளுமன்ற இடதுசாரிகள் ஸ்ரீ.ல.சு.க. பேரினவாதிகளுடன் சேர்ந்து பாராளுமன்ற அவையில் இனவாதக் கூச்சலிட்டனர், அடுத்து வரவிருந்த கேவலமான இனவாத நிகழ்வுக்குக் கட்டியங் கூறியது. பண்டாரநாயக்க செல்வநாயகம் உடன்படிக்கையை எதிர்த்து யூ.என்.பி. எப்படிப் பிரசாரங்களை முன்னெடுத்ததோ, அதே விதமாக, ஸ்ரீ.ல.சு. கட்சியும் நடந்து கொள்ளும் என்பது எவரும் எதிர்பாரத்திருக்கக் கூடியதே. தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதை விடத் தீராமல் வைத்திருப்பதில் பேரினவாதக் கட்சிகளுக்கு எப்போதும் லாபம் இருந்தது. யூ.என்.பி. ஆட்சி அமைக்கத் தமிழ

## இடதுசாரி இயக்கத்தின் சீரழிவும் சரிவும்

ரசுக் கட்சி உதவியதற்காகத் தமிழ் மக்களின் மொழியுரிமையை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மறுத்த காரணம் வெறும் அரசியல் வன்மம் மட்டுமே. பண்டாரநாயக்க கொண்டு வந்த தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் அடிப்படையில் பாராளுமன்றத்தில் 1966 ஜனவரியில் அறிமுகப்படுத்திய சட்டவிதிகளை எதிர்ப்பதற்கு ஒரு இடதுசாரிக்கு எவ்விதமான நல்ல காரணமும் இருந்திருக்க முடியாது. எனினும் பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகள் இரண்டும் 1966 ஜனவரி 8ம் திகதி ஸ்ரீ.ல.சு.க. முன்னெடுத்த எதிர்ப்பு ஊர்வலத்திற் பங்குபற்றியதுடன் மிகக் கேவலமான இனவாத சுலோகங்களையும் கூவினர். அவர்களுடைய தொழிற் சங்க அமைப்புகளும் அந்த இழிசெயலில் ஈடுபட்டமை தொழிலாளர் வர்க்க ஐக்கியத்திற்கு ஒரு பாதகமான அடியாகும். அதில் ஜே.வி.பி. நிறுவகரான விஜேவீர பங்குபற்றியதும் குறிப்பிடத்தக்கதாகும். மாக்சிய லெனினிசக் கட்சி இளைஞர் அணி தலைமைக் குழுவிலிருந்த விஜேவீர பேரினவாத ஊர்வலத்தை ஆதரித்துச் செயற்பட்டதற்காக அக் கட்சியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுப் பின்னர் கட்சியில் இனவாத அடிப்படையில் பிளவை ஏற்படுத்தியதும் பாராளுமன்ற இடது சாரிகளின் தவறான போக்குகளின் துணை விளைவுகளில் ஒன்று எனலாம்.

இடதுசாரிகளின் வர்க்க விசுவாசத்தையும் புரட்சிகர அரசியலையும் சோதிக்கும் முக்கிய நிகழ்வுகளில் ஒன்று சாதியத் தீண்டாமைக்கு எதிராக 1976 ஒக்ரோபரில் முன்னெடுக்கப்பட்ட எழுச்சி இயக்கமாகும். இன்னொன்று 1969 மே தினமும் வெசக் தினமும் ஒரே நாளில் அமைந்த போது மே தினத்தில் ஊர்வலங்களையும் கூட்டங்களையும் நடத்த அரசாங்கம் தடை விதித்த போது கட்சிகள் எடுத்த நிலைப்பாடாகும்.

சாதிய ஒடுக்குமுறை என்பது தென்னாசியாவிற்குப் பொதுவானது என்றாலும் அதன் உக்கிரம் பிரதேசத்துக்கு பிரதேசம் வேறுபடுகின்றது. நகரச் சூழலை விடக் கிராமச் சூழலில் (குறிப்பாக விவசாயம் சார்ந்த சூழலில்) அது தீவிரமாக இருப்பதனைக் காண்கிறோம். 1957ம் ஆண்டு சாதிப் பாகுபாட்டிற்கு எதிராக இயற்றப்பட்ட சமூக குறைபாடுகள் ஒழிப்புச் சட்டத்தினால் பெரிய மாற்றம் எதையும் கொண்டுவர இயல வில்லை. 1956க்குப் பின்பு தென்னிலங்கையில் சாதிய ஒடுக்குமுறை நெகிழ்ந்தாலும் ஏற்றத்தாழ்வுகள் தொடர்ந்தும் இருந்து வந்தன. யாழ்ப்பாணக் குடாநாட்டில் சாதியத் தீண்டாமை பல்வேறு தளங்களிற் தளராமல் தொடர்ந்தது. குடாநாட்டின் பொது இடங்களில் தீண்டாமை வலுவாக இருந்தது. அதற்கு எதிரான போராட்டம் தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்தால் முன்னெடுக்கப்பட்டது. அம் முன்னெடுப்பிற்கான தலைமைத் துவமும் வழிகாட்டலும் "சீனப்பிரிவு" எனப்பட்ட மாக்சிய லெனினிய கம்யூனிஸ்ற் கட்சியால் வழங்கப்பட்டது. உயர் சாதியினரின் அடாவடித்தனங்களுக்கும் வன்முறைக்கும் பணியவில்லை என்ற முடிவைப் பாராளுமன்ற இடதுசாரிகள் விரும்பவில்லை. அதே வேளை, சாதியத் தீண்டாமையை ஒழிப்பதற்கான மாற்று வழி எதையும் காட்ட அவர்களால் இயலவில்லை. எனவே அவர்கள் தீவிரவாத எதிர்ப்பு, வன்முறை எதிர்ப்பு என்பன போன்ற பேர்களில் தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்துக்குக் குழிபறிப்பதில் ஈடுபட்டனர். அவர்கள் பாராளுமன்றப் பாதையில் சிக்கியிருந்த சமூகை அரசியல் நடைமுறைக்குப் பழக்கப்பட்டமையே அதற்கான காரணம் எனலாம்.

தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்தின் அதி முக்கியமான போராட்டமாக மாவிட்டபுரம் கோவில் நுழைவுப் போராட்டம் பலரால் கூறப்படுகிறது. ஒவ்வொரு கிராம மட்டத்திலும் மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட்ட வெகுசனப் போராட்ட அரசியலும் சாதி ஒடுக்குமுறையை முறியடிக்க வர்க்க அரசியலைக் கருவியாக கொண்டிருந்தமையுமே அந்த இயக்கத்தின் உண்மையான முக்கியத்துவமாகும். 1970க்குப் பின்னரும் தொடர்ந்த தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்துக்கு, 1947க்குப் பின்பு வடபுலத்தில் மாக்சிய அரசியலுக்கு மக்களின் ஆதரவை வென்றதில் முதன்மையான ஒரு பங்கு இருந்தது.

இக் காலப்பகுதியில் மலையகத்திலும் அரசியல் விழிப்புணர்ச்சி வலுப்பெறத் தொடங்கியமை கவனத்திற்கு உரியது. இ.தொ.காவின் காட்டிக் கொடுப்பு அரசியலுக்கு முக்கிய சவாலாகச் செங்கொடிச் சங்கம் (இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கம்) தொழிலாளர்களுக்கு அரசியல் அறிவூட்டவும் போராட்டங்களை வர்க்க அடிப்படையில் முன்னெடுக்கவும் உறுதியாகச் செயற்பட்டது.

சீனாவில் பண்பாட்டுப் புரட்சி முன்று முன்னெடுக்கப்பட்ட காலமாகவும் அக்காலம் அமைந்ததால், மக்கள் அரசியல், மக்கள் யுத்தம் என்ற கருத்துக்கள் இடதுசாரி இயக்கங்களுள் விரிவாகப் பேசப்பட்ட காலமாகவும் அது அமைந்தது. அத்துடன் தென் வியற்நாமில் அமெரிக்கா தனது போரையும் மனித உரிமை மீறல்களையும் உக்கிரப்படுத்திய அதேவேளை, வியற்நாமிய விடுதலை இயக்கம் மக்கள் யுத்தத்தை முன்னெடுத்தது. ஒரு புத்த பிக்குவின் தீக்குளிப்பு உட்படப் பல எதிர்ப்பு நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட்ட நிலையில் இலங்கையிலும் அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிரான ஆர்பாட்டங்கள் வலுப்பெற்றன.

யூ.என்.பிக்கு எதிரான மக்கள் உணர்வும் சர்வதேச ரீதியாக ஏகாதிபத்திய விரோத விடுதலை இயக்கங்கள் எழுச்சிபெறத் தொடங்கியமையும் இலங்கையில் இடதுசாரி இயக்கத்தை மீண்டும் வலுப்படுத்தக் கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்க வேண்டும். எனினும் மாக்சிய லெனினியவாதிகள் மட்டுமே மலையகத்தின் சில பகுதிகளிலும் வடக்கில் தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்தின் மூலமும் மக்களை அரசியல் மயப்படுத்துவதில் அக்கறை காட்டினர். இரண்டு பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகளும் அடுத்த தேர்தலில் ஸ்ரீ.ல.சு.கவுடன் கூட்டணி அமைப்பதைப் பற்றிக்கவனங் காட்டியதால் தொழிலாளர் வர்க்க அரசியலையும் வர்க்க நிலைப்பாட்டையும் மேலும் நெகிழவிட்டனர்.

1969ம் ஆண்டு வெசக் கொண்டாட்டமும் மே தினமும் ஒரே நாளில் வந்த போது, அரசாங்கம் மே முதலாம் திகதி மே தின ஆர்ப்பாட்டங்களை நடத்தத் தடை விதித்தது. பாராளுமன்ற இடதுசாரிகள் அதை எதிர்ப்பின்றி ஏற்று, மே தின ஆர்பாட்டத்தை மறுநாள் நடத்த உடன்பட்டனர். மே தினத்திற்கும் புத்த மதத்திற்கும் ஒருவித முரண்பாடும் இல்லை என்றும் மே தினம் தொழிலாளர்களின் புனித நாள் என்றும் வலியுறுத்தி வெசாக் கொண்டாட்டங்களுக்குத் தடையின்றி மே தினத்தில் தமது ஆர்பாட்டங்களை நடத்த அனைத்துத் தொழிற் சங்கங்களும் முடிவெடுத்திருந்தால் அது மக்களை வென்றெடுக்க உதவியிருக்கும். ஆனால் பாராளுமன்ற இடதுசாரிகளின் சரணாகதி, பௌத்த அரசியலின் எழுச்சிக்கே உதவியது. இந் நிலையில் மாக்சிய லெனினியக் கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமே மே தினத்தை உரிய நாளிற் கொண்டாட முடிவு செய்தது.

இவ்வாறு மாக்சிய லெனினியக் கம்யூனிஸ்ட் கட்சி தனித்து நின்றமை அரசாங்கம் தரப்பிற்கு அதை அடக்குவதற்குத் துணிவூட்டியது. அதை விடவும் அக் கட்சியின் தலைவர் சண்முகதாசன் ஒரு தமிழர் என்பதும் அரசாங்கத்திற்கு ஒரு வசதியாயிற்று. மற்ற இடதுசாரிகள், தாங்கள் மே தின விடயத்தில் விட்டுக் கொடுத்த போதும், மே முதலாம் திகதி கொண்டாடும் உரிமை எவருக்கும் உண்டு என்பதை வலியுறுத்தியிருக்கலாம். மாறாக அவர்கள் ஸ்ரீ.ல.சு. கட்சியுடனான நட்பையும் தேர்தல் கணிப்புகளையும் கருதி அவ்வாறு செய்யவில்லை.

கொழும்பில் மாக்சிய லெனினிசக் கம்யூனிஸ்ட் கட்சியின் மே தின ஊர்வலத்தைத் தடுக்கப் பொலிசாருக்கு முடிந்த போதும், பெருந் திரளானோர் கட்சிப் பணிமனையில் திரண்டு கூட்டம் நடத்துவதைத் தடுக்க முடியவில்லை. யாழ்ப்பாணத்தில் பொலிசாரின் வலைக்குள் சிக்காமல் தொழிலாளர்கள் ஊர்வலத்திற் பங்கு கொண்டதுடன் கூட்டத்தையும் நடத்தினர். ஊர்வலத்தின் போது, தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்தின் முன்னால் தாங்கள் பின்வாங்க நேரிட்டதற்கு பழிவாங்குகின்ற தோரணையிற் பொலிசார் கடுந் தாக்குதல் தொடுத்துக் கட்சியின் முக்கிய தோழர்கள் பலர் கடுமையாக தாக்கப்பட்டபோதும், ஊர்வலமும் கூட்டமும் வெற்றிகரமாக நடந்து முடிந்தன. இது மக்கள் திரளின் வலிமையை உணர்த்திய ஒரு நிகழ்வு என்பதுடன் வடக்கிற் புரட்சிகர அரசியலுக்கு தென்பூட்டுவதாகவும் அமைந்தது.

மறுபுறம், ஏற்கெனவே தேசிய முதலாளியத்துடன் சமரசம் என்ற நிலைப்பாட்டிலிருந்த பிரேம்லால் குமாரசிறி கட்சியிலிருந்து 1965ல் விலகியதன் பின்பு, இனவாத அரசியற் கண்ணோட்டத்தை முன்வைத்து அக் கட்சி இளைஞர்களிடையே தன்னை வளர்த்துக் கொண்ட விஜேவீர, 1966ல் விலகியதும் சண்முகதாசனுக்கு எதிரான பேரினவாதப் பிரசாரத்தில் கெனமன்-மென்டிஸ் தலைமை இறங்கியதையும் வைத்து நோக்கும் போது, மே தினம்-வெசாக் முரண்பாட்டில் அக் கட்சியின் நிலைப்பாடு அதைத் தென்னிலங்கையிற் பலவீனப்படுத்த உதவியது எனக் கூறலாம். அக் கட்சி தென்னிலங்கையில் புரட்சிகர அரசியலைப் போதியளவில் முன்னெடுக்க தவறியமை மேலும் அதற்குப் பங்களித்தது.

எவ்வாறாயினும், 1965-70 காலம் பொதுவாகவே சிங்கள மக்கள் நடுவே இடதுசாரிகளின் சரிவைத் துரிதப்படுத்திய காலம் எனலாம்.

## பெருந்தோட்டக் கம்பனிகள் நடாத்தும் சூறையாடல்கள்

அரசாங்கத்திடமிருந்து நீண்டகாலக் குத்தகைக்குப் பெற்று [illegible] தோட்டங்களை [illegible] கொண்ட கம்பனிகள் தோட்டங்களில் அரங்கேற்றி வரும் அராஜகங்கள் [illegible] அண்மைக் காலங்களில் இடம்பெற்று வரும் சில நடவடிக்கைகளால் தோட்டங்கள் மிகவும் வளமிழந்து செழிப்பற்றுப்போகும் நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன.

அந்த வகையில் [illegible] தேவைக்குத் தொழிற்சாலைகளை [illegible] இயந்திர [illegible]

[illegible] பயன்படைந்த கரும்புத் தேயிலை [illegible] தொடக்கம் ஒன்றரை இலட்சம் வரை விற்பனை செய்யப்படுகின்றது.

தோட்டங்களை குத்தகைக்கு எடுத்திருக்கும் இந்தக் கம்பனிகள் தொழிற்சாலைகளை மூடுவதனூடாக தொழிலாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய வேலைவாய்ப்புகளை இல்லாமல் செய்கின்றன. அதேநேரத்தில் நான்கு அல்லது ஐந்து [illegible] தோட்டங்களின் சேகரித்த தேயிலைக் கொழுந்துகளை மத்தியில் இருக்கின்ற ஒரு தொழிற்சாலை தெரிவுசெய்து மிகக் குறைந்த தொழிலாளர்களை [illegible]

[illegible] கொண்டு செயலாற்றிவரும் தோட்டக் கம்பனிகள் தேயிலைச் செடிகளுக்கு உரமிடல், மருந்தடித்தல், பாத்தி அமைத்தல் போன்ற எதுவித செயற்பாடுகளையும் முறையாக மேற்கொள்வதில்லை. ஒரு கால கட்டத்தில் போதுமானளவு விளைச்சலைப் பெற்றுக் கொடுத்த அநேகமான மலைகள் இந்தத் தோட்டக் கம்பனிகள் கையேற்றதன் பின்னர் மூடப்பட்ட மிக மோசமான வரலாறுகளும் இருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் காரணம் நாம் மேலே குறிப்பிட்டதைப்போல இலாபம் சம்பாதிப்பதை மட்டுமே முக்கிய நோக்கமாக கொண்டு தோட்டக் கம்பனிகள் செயற்படுவதே. இனிவரும் காலங்களில் தமது மண்ணையும் [illegible] பாதுகாத்துக் கொள்வதில் மலையகத் தொழிலாளர்கள் அதிக அக்கறை செலுத்தவேண்டியிருக்கிறது. [illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 9/11க்குப் பத்து ஆண்டுகளின் பின்: பாதுகாப்பற்ற உலகை நோக்கி !

அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் மீது தாக்குதல் நடந்து பத்து ஆண்டுகள் முடிவடைகின்றன. முன்னாள் அமெரிக்க அதிபர் புஷ்ஷின் "நீங்கள் ஒன்றில் எங்களோடு இருக்கிறீர்கள் அல்லது எதிரிகளோடு இருக்கிறீர்கள்" என்ற புகழ்பூத்த சொற்களோடு தொடங்கப்பட்ட 'பயங்கரவாதத்திற்கு எதிரான போர்' இன்னும் முடிந்தபாடாக இல்லை. உண்மையில் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற போர்வையில் இலட்சக் கணக்கான மக்கள், இதுவரை பல நாடுகளில் சர்வதேசத்தாலும் நாட்டு அரசாங்கங்களாலும் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

பயங்கரவாதத்திற்கு எதிரான போர் தொடங்கிய ஆப்கானிஸ்தான் உலகின் மிக ஆபத்தான இடமாக மாறியிருக்கிறது. ஆப்கானில் மிகவும் பாதுகாப்பான இடமெனக் கருதப்படும் அமெரிக்கத் தூதராலயத்தின் மீதும் மற்றும் நேட்டோ-கூட்டுப்படைத் தலைமையகம் மீதும் கடந்த மாதம் தலிபான்கள் நடாத்திய தாக்குதல் மூலம் குறிப்பிட்டளவில் பாரிய வெற்றியை தலிபான்கள் பெற்றிருக்கிறார்கள். வெல்லவே முடியாத ஒரு போரில் அமெரிக்கா பத்து ஆண்டுகளாக தொடர்ச்சியாக ஈடுபட்டுப் பல்லாயிரக்கணக்கான அப்பாவி ஆப்கானியர்களைக் கொன்று குவித்ததுதான் மிச்சம்.

ஈராக்கில் 'மக்களைக் காப்பாற்றுவது', 'ஆட்சி மாற்றம்' என்ற சொல்லாடல்களின் உதவியோடு படையெடுத்து, சதாமை தூக்கிலேற்றியதைத் தவிர வேறெதையும் அமெரிக்காவால் செய்ய முடியவில்லை. அங்கு இன்னமும் குண்டுகள் வெடிக்கின்றன, அமெரிக்கக் கூட்டுப்படைகள் அப்பாவி மக்களைக் கொல்கின்றனர். பாதுகாப்பின்மை இன்னமும் தொடர்கிறது.

மொத்தத்தில், அமெரிக்காவாலும் பயங்கரவாதத்திற்கு எதிரான போரினாலும் இன்றைய உலகம் மிகுந்த பாதுகாப்பற்றதாக ஆக்கப்பட்டிருக்கிறது. 'கலாசாரங்களுக்கிடையிலான மோதல்' என்ற கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பயங்கரவாதத்திற்கு எதிரான போர் இன்று சமூகத்தில் பல்வேறு நெருக்கடிகளை சந்திக்கிறது. ஒருவகையில் இந்தப் போர் மேற்குலகில் இஸ்லாத்துக்கு எதிரான போராகவும் இஸ்லாமியர்களுக்கெதிரான வெறுப்புணர்வாகவும் மாற்றப்பட்டிருக்கிறது. பெண்கள் பர்தா அணிவது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனக் காரணம் காட்டி பிரான்ஸ் அதைத் தடைசெய்ததும் அதையே இத்தாலியும் செய்ய இருப்பதும் சகல முஸ்லிம்களும் பயங்கரவாதிகளாகப் பார்க்கப்படுவதும் இதற்கான சிறந்த எடுத்துக் காட்டுகள்.

மறுபக்கத்தில் முதலாளித்துவம் பாரிய நெருக்கடிகளைச் சந்திக்கிறது. எனவே எண்ணெய்க்காகவும் பிற வருமானம் சார் தேவைகட்காகவும் புதிய களங்களை தேடுகிறது. அதன் பின்னர் அதற்கான காரணங்கள் தேடப்படுகின்றன. மொத்தத்தில் புதிய போர்களைத் தொடக்குவது தவிர்க்கவியலாததாகிறது. அமெரிக்காவில் நிலவும் பொருளாதார நெருக்கடியினால் அமெரிக்க சனத்தொகையில் 15% (46.2 மில்லியன் மக்கள்) வறுமைக் கோட்டின் கீழ் தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஐரோப்பாவில் ஒருபுறம் உலகின் முக்கிய தர நிர்ணய நிறுவனங்களுள் ஒன்றான மூடிஸ் அண்மையில் பிரான்சின் இரு மிகப் பெரிய வங்கிகளின் தரத்தைக் குறைத்துள்ளது. இது முழு பிரான்சையும் மட்டுமன்றி ஐரோப்பாவின் பல நாடுகளையும் நெருக்கடிக்குள் தள்ளுகிறது. மறுபுறம் கிரேக்க நாட்டின் கடன் பிரச்சனை தலைக்கு மேல் சென்றுவிட்டது. அது கடன் அடைக்க முடியாத வங்குரோத்து நிலையை அடைந்து விட்டது. ஆனால் கிரேக்கம் ஐரோப்பிய ஒன்றியத்தின் பகுதி என்பதால் அது வங்குரோத்து ஆவதை ஐரோப்பிய ஒன்றியம் அனுமதிக்காது. அனுமதித்தால் முழு ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் வங்குரோத்தாகும் நிலை ஏற்படும். ஏற்கனவே ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்குவதால் சிக்கன நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன. வேலையில்லாப் பிரச்சனையும் சமூக அமைதியின்மையும் தவிர்க்கவியலாத அம்சங்களாகிவிட்டன.

அறுபது ஆண்டுகளுக்கு மேலாக தனிநாட்டு அங்கீகாரத்துக்காக போராடிவருகின்ற பலஸ்தீனத்திற்கு ஐ.நாவில் அங்கீகாரமளிப்பதை ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஆதரிப்பதும் அமெரிக்கா வன்மையாக எதிர்ப்பதும் முதலாளித்துவத்திற்குள்ளான உள்முரண்பாடுகளின் தீவிரத்தை உணர்த்தும் செயல்வினையாகும். தேசங்களைப் 'பாதுகாப்பு அரசுகளாக' மாற்றி மனித உரிமைகளையே மதிக்காத வகையில் அரசுகள் சொற்பட்டுக் கடுமையான சட்டங்களை உருவாக்கியபோதும் பாதுகாப்புணர்வை நிலைநாட்ட முடியவில்லை. இதுதான் இன்றைய யதார்த்தம். உலக மக்கள் எல்லோரும் பாதுகாப்பில்லாத சூழலிலேயே உயிர் வாழ்வதாக நினைக்கிறார்கள். மொத்தத்தில் உலகைப் பாதுகாப்பற்ற இடமாக மாற்றப்பட்டிருக்கிறது.

**சேயோன்**

## அமைச்சரின் கால்களில் வீழ்ந்து வணங்க மறுத்த வடபுலத்து மாணவன்!

கடந்த 20ம் திகதியன்று யாழ். பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் கல்வி மேம்பாடு பற்றிய ஒரு மாநாடு நடைபெற்றது. அதில் வடமாகாண ஆளுனர் ஜீ.ஏ. சந்திரசிறி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் மற்றும் அதிபர்கள், அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். இம் மாநாட்டில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் அதி உச்சபுள்ளிகள் பெற்ற மூன்று வடபுலத்து மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் கலந்து கொண்ட முல்லைத்தீவு மாவட்டம் நெத்த லியாறு தமிழ் வித்தியாலய மாணவன் ப. சேதுராகவன் (194 புள்ளிகள்) அமைச்சரின் கால்களில் வீழ்ந்து வணங்குமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளை மறுத்து நின்றான். ஏனைய இரு மாணவிகள் அமைச்சரின் கால்களில் வீழ்ந்து வணங்கினர். அவ்வாறு செய்யுமாறு பெற்றோர்கள் வலியுறுத்திய போதிலும் அதனைச் செய்ய முடியாது எனக் கூறிவிட்டான் அம் மாணவன். இதனால் அமைச்சர் உட்பட அனைவரும் உள்ளார்ந்த அதிர்ச்சிக்கு ஆளாகினர்.

வெளியே வந்த அந்தபத்து வயது சிறுவனிடம் செய்தியாளர்கள் ஏன் அமைச்சரின் கால்களில் விழவில்லை எனக் கேட்டனர். அதற்கு அச்சிறுவன் கூறிய பதில் நான் பெற்றோர் ஆசிரியர் கால்களில் வீழ்வேனே தவிர மற்ற எவரது கால்களிலும் விழமாட்டேன் என்று கூறினான். அத்துடன் தான் யுத்தத்திற்கு மத்தியில் முகாமில் வாழ்ந்து மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் படித்ததாகவும் கூறினான். அடிமைத்தனத்திற்கு தன்னை ஆட்படுத்த மறுத்த இம் மாணவனின் நெஞ்சுரத்தை பாராட்டியே



தீரவேண்டும்.

இப் பத்து வயதுச் சிறுவன் யுத்தத்தாலும் நெருக்கடிகளாலும் முகாம் வாழ் வாலும் எவ்வளவிற்கு நெஞ்சம் புண்பட்டு நின்றிருக்கிறான் என்பதன் வெளிப்பாடே அமைச்சரின் கால்களில் வீழ்ந்து அடிமைத்தனத்தை அரவணைக்க மறுத்த நிலைப்பாடாகும். ஜனநாயகமும் இயல்பு வாழ்வும் மறுக்கப்பட்டு அச்சம், அடக்குமுறை, பயப்பீதியின் மத்தியில் மௌன ஆத்திரக் கொதிப்பில் உள்ள மக்களின் மனசாட்சிக் குரலாகவே மாணவன் சேதுராகவனின் நிலைப்பாடு வெளிப்பட்டுள்ளது. இதனை அடக்கியாள்வோரும் அடிமைத்தனத்தில் உழல்வோரும் கவனத்தில் கொள்வார்களா?

## உலக அரங்கின் நாட்குறிப்பு

உலகோன்

### நடப்பது நன்மைக்கல்ல

தங்கள் மீது நம்பிக்கையில்லாது அந்நிய சக்திகளின் உதவியுடன் எல்லாவற்றையும் நடத்தி முடித்துவிடலாம் என்பவர்கட்கும் உலக நாடுகள் ஒரு நாட்டின் மீது அக்கறை கொள்வது அந் நாட்டு மக்களின் நன்மைக்காகவே என்று கருதுபவர்களுக்கும், உலகம் அவர்கள் சொல்வது மாதிரி இல்லை எனத் தெளிவுபடுத்த, இன்று அரபு எழுச்சியின் தொடர்ச்சியாகத் துனிசியாவிலும் எகிப்திலும் சிரியாவிலும் லிபியாவிலும் யேமனிலும் நடந்துகொண்டிருப்பவை போதுமானவை.

லிபியாவில் ஆட்சி மாற்றத்தை தெற்காக மேற்குலகம் ஆதரித்தது என்பது வெட்டவெளிச்சமாகி உள்ளது. வட ஆபிரிக்காவில் ஓரளவுக்கு வளர்ச்சி அடைந்துள்ள ஒரே நாட்டையும் எண்ணெய்க்காக சிதைத்தாகிவிட்டது. பத்தும் பன்னிரண்டு வயதுச் சிறுவர்கள் ஆயுதங்களை ஏந்திக்கொண்டு புரட்சிப் படையினராக வீதிகளில் திரிவதையும் தங்கள் நாட்டுக் கட்டிடங்களின் மீது சரமாரியாகச் சுடுவதையும் வெளிநாட்டுக் கமெராக்காரர்களுக்கு முன் ஓடிவந்து குழந்தைத்தனம் மாறாது கையசைப்பதும் லிபிய விடுதலை என்று கூட்டப்படுவதன் ஒரு அடையாளம் என்றே புரிந்துகொள்ள வேண்டி இருக்கிறது. இந்தப் பிஞ்சுக் கைகளில் ஆயுதங்களைக் கொடுத்தது யார்? சர்வதேச சட்டங்களும் போராளிச் சிறார்கள் பற்றிய ஐ.நாவின் பட்டயங்களும் எங்கே போயின? விடுதலையின் பேரால் எவருடைய நன்மைக்காகவோ இவர்கள் பலியிடப்படுகிறார்கள். இவர்கள் இழந்த குழந்தைப் பருவத்தை இவர்களுக்கு மீட்டுத் தரப்போவது யார்? இனி லிபியா முன்பு போல நிலையான அமைதியான நாடாக இருக்கப்போவதில்லை.

சொத்துச் சண்டையில் ஏற்கனவே தேசிய இடைக்கால சபைக்குள் சிக்கல்கள் அதிகரித்துச் சிலர் கொல்லப்பட்டுள்ளனர். இது வெறும் தொடக்கமே. அதைவிட, எண்ணெயைப் பங்குபோடப் பிரான்ஸ், பிரித்தானியா, அமெரிக்கா ஆகியன போட்டி போடுகின்றன. தேசிய இடைக்கால சபையின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அரங்கேறும் ஒடுக்குமுறைகளை, வன்முறைகளைக், குறிப்பாக மனித உரிமை மீறல்களை, பற்றிப் பேசுவார் யார்? இவை விடுதலைக்கு கொடுக்கின்ற விலைகளா? இது விடுதலையே அல்ல என அறிய லிபிய மக்களுக்கு நீண்டகாலமெடுக்காது.

கடாபியின் கூலிப்படைகளாக இருந்து சண்டையிடுவதாக குற்றஞ்சாட்டப்படும் கறுப்பின ஆபிரிக்கர்களைத் திட்டமிட்டுக் கொல்வதாக மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. அதே வேளை, நேட்டோக் கூட்டுப்படைகளின் கண்மூடித்தனமான தாக்குதலில் பலியானவர்களுக்குப் பதில் என்ன? மனித உரிமைகள் பற்றி இவர்கள் கவலைப்படுகிறார்களாம் என்று சொல்பவர்களை என்ன செய்வது?

துனிசியாவிலும் எகிப்திலும் சர்வாதிகாரிகளை அகற்றியதோடு புரட்சி முடிந்துவிடவில்லை என்பதை அம் மக்கள் இப்போது உணருகிறார்கள். அதனால் தான் வீதிகளில் இறங்கித் தொடர்ச்சியாகப் போராடுகிறார்கள். இப்போது புரட்சிகர முற்போக்கு சக்திகளினால் போராட்டம் முன்னெடுக்கப்படுவது அவசியமான முன்நிபந்தனையாகிறது.

லிபியாவில் அக்கறைப்பட்ட மேற்குலகுக்கு பஹ்ரேன், யேமன், சிரியா என்பன எங்கே போயின? இப்போது போர்கள் லாபத்திற்காகவே நடக்கின்றன. யாரையும் பாதுகாக்க அல்ல. பொருளாதார நெருக்கடி முதலாளித்துவத்தை மேலும் போருக்குள் தள்ளுகின்றது. ஆப்கானிஸ்தான், ஈராக், லிபியா என்ற வரிசையில் அடுத்ததாக ஈரான், வெனிசுவேலா என்பன இருக்கக்கூடும்.

மத்திய கிழக்கில் ஆட்சி மாற்றத்துக்காக பொதுத்தளத்தில் போராடிய, போராடுகின்ற குழுக்களிற்கிடையிலான முரண்பாடுகள் கூர்மையடைகின்றன. குறிப்பாக இஸ்லாமிய மதவாத மற்றும் புரட்சிகர சக்திகளிடையே வேறுபாடுகள் சமூகத்தில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளை வெளிச்சத்துக்கு கொண்டுவருவதோடு இஸ்லாமிய மதவாத சக்திகளின் நோக்கையும் கேள்விக்கு உட்படுத்துகின்றன. இவை எல்லாம் அந்நிய ஆதரவு பற்றி நாம் சிந்திக்க வேண்டியதன் தேவையை வலியுறுத்துகின்றன. ஒரு அநியாயத்தை ஆதரிக்கும் சொற்கள் எல்லா அநியாயத்தையும் ஆதரிக்கின்றன. ஒரு அநியாயத்தை எதிர்ப்பது என்பது எல்லா அநியாயத்தையும் எதிர்ப்பதை வேண்டி நிற்கின்றது. நியாயம் என்பது பொதுவானது, சந்தர்ப்பவாதமல்ல. ஆனால், பொதுப்பட, இப்போது நடப்பது எதுவும் நன்மைக்கல்ல.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்ரோபர 2011

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# புதிய பூமி

இணையத் தளம் : Website: www.ndpsl.org



## புரட்சிவாதி சே மக்களிடையே வாழ்ந்து வருகிறார்

உலகின் உழைக்கும் மக்களால், அடக்கியொடுக்கப்படும் மக்களால் போற்றிப் புகழப்படுபவர் 'சே' என்று அன்புடன் அழைக்கப்படும் ஏனஸ்டோ சேகுவேரா ஆவார். பொலீவியாவில் அமெரிக்க சி.ஐ.எ உளவுப்பிரிவினரால் 1967ம் ஆண்டு ஒக்ரோபர் 10ஆம் திகதி சேகுவேரா கொல்லப்பட்டார். அவர் கொல்லப்பட்ட 44ம் ஆண்டு தினம் உலகம் பூராவும் நினைவு கூரப்பட்டது. வர்க்கச் சுரண்டல், சமூக கொடுமைகள், ஏற்றத்தாழ்வுகள், வறுமை, தீரா நோய்கள், கல்வியின்மை, அடக்குமுறைகள் போன்றவற்றை எதிர்த்து எழுந்த புரட்சி வீரனே சேயாவார். ஏகாதிபத்தியத்திற்குச் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தவர் சே. அடக்கி ஒடுக்கப்பட்டு குரல் நசுக்கப்பட்டு இருந்த மக்களின் புரட்சிக் குரலாகப் போராட்டத் தீயாக எழுந்தவர் தோழர் சே. புரட்சிவாதியான ஒரு சேயை அழித்தது அமெரிக்கா. ஆனால் அதன் பின் பல்லாயிரம் சேக்கள் உலகம் பூராவும் உருவாகினர். அனைத்து அடக்குமுறைகளுக்கு எதிராகவும், ஏகாதியபத்தியத்திற்கு எதிராகவும் எழுந்த சே என்னும் மாக்சியப் புரட்சிவாதி மக்களுக்கான கடும் உழைப்பு, தியாகம், அர்ப்பணிப்பு, நம்பிக்கை, புரட்சி மீதான தாகம், புதிய உலகைப் படைக்கும் சோர்வடையா விருப்பு போன்றவற்றால் புடம்போடப்பட்டவராக வாழ்ந்து வீரமரணம் அடைந்தவர். அவரது நாமம் என்றென்றும் உலக மக்களால் நினைவுகூரப்படும். அவரது போராட்ட பயணம் தொடரும்.

## தமிழ் நாட்டின் இன உணர்வும் சாதி வெறியும் பரமக்குடியில் ஜெயாவின் பொலிஸ் வெறியாட்டம்

கடந்த செப்ரம்பர் மாதம் 11ம் திகதியன்று தமிழ்நாட்டின் தென் மாவட்டமான பரமக்குடியில் தாழ்த்தப்பட்ட (தலித்) மக்கள் மீது பொலீஸ் வெறித்தனமாகச் சுட்டதில் ஆறுபேர் உயிரிழந்தனர். முப்பதுக்கும் மேற்பட்டோர் காமயமடைந்தனர். தாழ்த்தப்பட்ட மக்களைக் குறிவைத்து ஆதிக்க சாதி வெறியர்களும் பொலீசும் இவ்வாறான கொலைவெறித் தாக்குதலை நடாத்துவது இதுதான் முதற் தடவையல்ல. ஆனால், அண்மைய தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. வெற்றிபெற்று ஜெயலலிதா பதவிக்கு வந்த பின்னர் பொலிஸ் இரத்தக் காட்டேரிகள் நடத்திய முதல் கொலைவெறியாட்டம் இதுவேயாகும். முதலமைச்சரான அம்மணிக்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான இத் துப்பாக்கிச் சூடும் கொலைகளும் கண்களுக்குத் தெரியவில்லை. அதற்குக் காரணம் இருக்கிறது. ஜெயலலிதா ஒரு பிராமணப் பெண்ணாவார். அவர்களது வழிகாட்டிகள் இந்துத்துவப் பிற்போக்குவாதிகள். அவரின் நெருங்கிய சகபாடி குஜராத்தின் முதலமைச்சரும் நரபலி எடுப்பதில் முன்னிற்பவருமான நரேந்திர மோடியாவார். இவற்றுக்கு மேலாக பரமக்குடியில் முக்குலத்தோர் (தேவர்,கள்ளர், அகம்பம்படியார்) எனப்படும் ஆதிக்க சாதிகளின் வாக்கு வங்கி ஜெயலலிதாவிற்கு தேவை. ஜெயலலிதாவின் அன்பு தோழி சசிகலாவும் அவரது கணவர் நடராஜனும் தேவர் சாதியை சேர்ந்தவர்கள். அவர்களுக்கெனத் தனிச் செல்வாக்கும் வாக்கு வங்கியும் உண்டு. இந்நிலையில் ஜெயலலிதா பரமக்குடியின் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக எவ்வாறு பேசவோ உதவவோ முடியும்? தமிழ்நாட்டில் சாதியமும் தீண்டாமையும் இப்போதும் தலைவிரித்தாடுகின்றன. இதே சாதியத்தை முன்வைத்தே அங்கு வாக்கு வங்கிகள் கட்டியெழுப்பப்பட்டன. ஒவ்வொரு சாதிக்கும் சாதித் தலைவர்கள் உண்டு. அவர்கள் சாதியின், பெயரால் வாக்குகள் பதவிகள் பணக்குவியல்கள் நிலங்கள் சொத்துக்கள் சேர்த்துக் கொள்கிறார்கள். அரசியலும் மதமும், சினிமாவும் சாதியத்தைப் பாதுகாத்து வருகின்றன. தமிழ்நாட்டில் மட்டுமன்றி முழு இந்தியாவிலும் இதே கதைதான். இந்தியா பழம்பெருமை பேசும் போது இந்த இழிநிலையான சாதியத்தையும் சேர்த்துதான் பேசுகிறது. தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் முக்குலத்தோரின் எண்ணிக்கை அதிகமானதாகும். இவர்கள் அரசு பட்டியலில் பிற்படுத்தப்பட்டோர் வரிசையில் உள்ளனர். ஆனால் சாதியம் தீண்டாமை பார்ப்பதில் இவர்களே ஆதிக்க சாதி வெறியுடையோர். இவர்களின் தலைவரே



பசும்பொன் முத்துராமலிங்க தேவர். இவருக்கு வருடா வருடம் விழா எடுப்போர் முக்குலத்தோர். அதேபோன்று தாழ்த்தப்பட்ட (தலித்) மக்களின் தலைவராக இருந்து 1957ல் ஆதிக்க சாதிவெறியர்களால் வெட்டிக் கொல்லப்பட்ட இமானுவேல் சேகரன் அவருக்கும் வருடா வருடம் தாழ்த்தப்பட்ட மக்கள் விழா எடுப்பர். இவ்வருடமும் இமானுவேல் சேகரனுக்கு விழா எடுப்பதை ஜெயாவின் பொலிஸ் படை தடுத்தது. கலவரம் வருமெனக் காரணம் காட்டியது. அதனையும் மீறிச் சுமார் முப்பதினாயிரம் மக்கள் கூடினர். இதனைப் பொறுக்கமாட்டாத நிலையிலேயே காக்கிச் சட்டை போட்ட சாதி வெறியர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி இருக்கின்றார்கள். இருந்தும் காயப்பட்டும் இரத்தம் சிந்தியுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் சாதிவெறியை எதிர்த்த சாட்சியத் தியாகிகள் ஆகியுள்ளனர்.

தமிழ் நாட்டில் தமிழ்த் தேசியம், தமிழ் உணர்வு, தமிழன் பெருமைப் பற்றிப் பேசுவோர் இந்த மக்களுக்கு என்ன கூறுவார்கள். சீறியெழும் சீமானும், புயலாகி நிற்கும் வைக்கோவும் இனமானவரான நெடுமாறனும் மட்டுமன்றி சக்கர நாட்காலியில் "தமிழாக" வாழ்ந்துவரும் மு. கருணாநிதியும் என்ன சொல்வார்கள்? இத்தகைய தனவந்தர்கள், நிலவுடைமை மிகுந்தோர், கோடிஸ்வரர்களுக்கு தாழ்த்தப்பட்ட மக்கள் ஒரு பொருட்டேயில்லை. வாழ்க தமிழ்நாடு! வளர்க தமிழ்! வெல்க இன உணர்வாளர்கள்! இதுதான் தமிழ்நாட்டின் தமிழர்களது தமிழ் உணர்வு என்றால் அவர்களது முகங்களில் காறித்துப்புவதே சரியானதாகும்.

## யாழ். பல். கழக மாணவத் தலைவர் மீதான அராஜகத் தாக்குதலுக்கு கண்டனம்

வடக்குக் கிழக்கில் கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக இருந்து வந்த ஆயுதக் கலாச்சாரமும் அராஜக தாக்குதல்களும் தற்போதும் நீடித்து வருவதையே யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ் தவபாலன் (வயது 25) மீதான பட்டப்பகல் தாக்குதல் எடுத்துக் காட்டுகின்றது. கறுப்புத்துணிகளால் முகங்களை மறைத்துக் கட்டிய ஆயுததாரிகள் மோட்டார் சைக்கிள்களில் வந்து தவபாலனை வழிமறித்துத் தாக்கி படுகாயங்கள் விளைவித்துள்ளனர். இத் தாக்குதலை எவ்வகையிலும் நியாயப்படுத்தவோ மறைக்கவோ முடியாது. அரசியலில் மாற்றுக் கருத்தைக் கொண்டிருந்தமைக்காக பல்கலைக் கழக மாணவத் தலைவர் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள மேற்படி தாக்குதலை எமது புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது. அதேவேளை இத்தாக்குதலானது ஒவ்வொரு பல்கலைக்கழக மாணவர்கள் மீதும் தொடுக்கப்பட்ட தாக்குதலாகவே கருத முடிகிறது. எனவே தொடரும் இது போன்ற ஆயுதம் தாங்கிய அராஜக குண்டர்களின் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும் என மக்களோடு இணைந்து நின்று எமது கட்சி உரத்துக் குரல் கொடுக்கின்றது. இவ்வாறு புதிய ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் அரசியல் குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் அவ் அறிக்கையில், வடக்குக் கிழக்கில் ஜனநாயகம், சுதந்திரம் இயல்பு வாழ்வு, இல்லாத சூழலை அரசாங்கமே பாதுகாத்து வருகின்றது. அதன் மத்தியிலேயே பல்வேறு விதமான அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள், கொள்ளைகள் மற்றும் கொலைகளை ஆயுததாரிகள் அரங்கேற்றி வந்திருக்கிறார்கள். இன்றும் அதே நிலை தான் தொடர்கிறது. மக்கள் அச்சம் பீதியுடனேயே வாழ்ந்து வருகின்றார்கள். அதேவேளை மாற்றுக் கருத்துக்களைக் கொண்டவர்களும் ஊடகவியலாளர்களும் திட்டமிட்ட வகையில் தாக்கப்பட்டு வருகின்றார்கள். இரண்டு மாதங்களுக்கு முன்பு உதயன் ஊடகவியலாளர் குகநாதன் ஆயுதக் குண்டர்களால் தாக்கப்பட்டு தலையில் படுகாயமடைந்தார். அதிலிருந்து இன்னும் அவர் பூரண குணமடைவதற்கு முன்பாகவே நேற்று முன்தினம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவரான தவபாலன் கடுமையான தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார். இவ்வாறான தொடர் தாக்குதல்கள் மூலம் ஆயுதக் குண்டர்களை வழிநடாத்துவோர் தமக்குப் பிடிக்காதோரை பழிவாங்கிக் கொள்வதுடன் மக்கள் மத்தியில் குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் அச்சம் பீதியை தோற்றுவிக்கவும் முயலுகிறார்கள். இதன் மூலம் ஜனநாயகம் சுதந்திரம் இயல்பு வாழ்வு மீட்கப்படுவதைத் தடுத்து அடக்குமுறைச் சூழலை வைத்திருக்கவே விரும்புகிறார்கள். எனவே ஜனநாயக இடதுசாரி முற்போக்கு சக்திகள் பொதுக் கோரிக்கைகளின் அடிப்படையில் ஐக்கியப்பட்டு முன்நிற்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளதை எமது கட்சி இவ்வேளை சுட்டிக் காட்டுகின்றது.



ஞா.சிறீ மனோகரன் எழுதிய இஸ்ரேலின் உருவாக்கம் நூல் வெளியீடு உரும்பிராய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற போது வசாவிளான் மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு.ஆர்.சீ.நடராஜா தலைமை தாங்குவதையும் ரீ.வி.கிருஸ்ணசாமி உரையாற்றுவதையும் நூலாசிரியர் ஏற்புரை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் காணலாம்

வெளியிடுபவர் : இ.தம்பையா, மேல்மாடி இல 06, 57 [illegible] கொழும்பு 06. அச்சுப்பதிப்பு : கொம் பிரின்ட் சிஸ்ரம், HL, 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org